ICHR

முகலாய இந்தியாவில் நிலஉடைமை உறவுகளை பற்றிய அபிப்ராயங்கள்

ஸய்யத் நூருல் ஹஸன்

முகலாய இந்தியாவில் நில உடைமை உறவுகளை பற்றிய அபிப்பிராயங்கள்

ஸய்யத் நூருல் ஹஸன்

ICHR

பாரதீய இதிஹாஸ் அனுஸந்தான் பரிஷத்
நியூ டில்லி

மார்ச் 15, 1975
பால்குன் 24, 1896

© பாரதீய இதிஹாஸ் அனுஸந்தான் பரிஷத், 1975

தமிழாக்கம்: விஜயா சுப்ரமண்யம்

விலை: ரூ. 15.00

பதிப்பாளர்: மானேஜர் (பப்ளிகேஷன்), பாரதீய
இதிஹாஸ் அனுஸந்தான் பரிஷத்,
35, பிரேஸ் ஷா ரோடு, புது டில்லி-110001
அச்சிட்டவர்: யூனியன் பிரின்டர்ஸ் கோ-ஆப்பரேடிவ்
இன்டஸ்ட்ரியல் சொஸைட்டி லிமிடெட்,
2216, ஹர்த்யான் ஸிங் ரோடு,
புது தில்லி-110005

ஆங்கிலப் பதிப்பின் முன்னுரை

பாட்னு பல்கலைக் கழகத்தில், சர்வகலாசாலை மான்யக் கமிஷனின் திட்டத்தின் கீழ், தேசிய சரித்திர விரிவுரையாளராக, 1973 ஆண்டு, ஏப்ரல் மாதம், நான் பேசியவற்றை ஆதாரமாகக் கொண்டது இச்சிறு புத்தகம். நான் அச்சொற்பொழிவுகளின் நடையையும் வேகத்தையும் உத்தேசித்து, எந்த விதமான மாற்றமும் செய்யவில்லை. முகலாயர்கள் காலத்தில் நில உடைமை உறவுகள் விஷயமாக நான் எழுப்பியுள்ள பிரச்சினைகள் சிலவற்றை, வரலாற்று நிபுணர்கள் மேலும் தொடருவார்களேயானால் மகிழ்ச்சியடைவேன்.

இச்சொற்பொழிவுகள் பாட்னு பல்கலைக் கழகத்தின் சரித்திரப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் என். பி. வர்மா, அவர்களின் உதவியால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு டைப் செய்யப்பட்டது. பேராசிரியர் ஆர். எஸ். சர்மா, டாக்டர் கயூமுதீன் அஹமத், பேராசிரியர் ஸதீஷ் சந்திரா ஆகியோர் கையெழுத்துப் பிரதியை அச்சுக்கு அனுப்ப மனமுவந்து தயார் செய்தனர். அவர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புது டில்லி
ஜனவரி 1973

எஸ். நூருல் ஹஸன்

பொருளடக்கம்

I	பிரச்சினைகள், ஆதாரங்கள், வழிமுறை	1
II	நில உடைமைப் பொருளாட்சியின் அமைப்பு	29
III	அரசாங்கமும் நிலையற்ற நிலம் படைத்த வகுப்பினரும்	49

1 பிரச்சினைகள், ஆதாரங்கள், வழிமுறை

இடைக்காலத்திய இந்திய நில உடைமைச் சரித்திரத்தில் நில உடைமை உறவுகள் குறித்து ஒரு மேன்மை வாய்ந்த கூட்டத்தின் முன்பு பேசும் பேறு பெற்றதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இது போன்ற கற்றறிந்த அவையினருக்கு இடைக்காலத்திய வரலாற்று மாணவர்களின் சிந்தனைக்குரியதான நில உடைமைப் பிரச்சினைகள் என்னென்ன என்பதை நான் கூறத் தேவையில்லை. எனக்குத் தோன்றும் சில பிரச்சினைகளில் மிகவும் திகைப்பூட்டுபவையாக இருப்பவற்றை மாத்திரம் சுருக்கமாகத் தெரிவிக்கிறேன்.

முதன் முதலாக இருக்கும் சிக்கல்—இதை நான் முக்கியத்துவத்தின் வரிசையில் சொல்லவில்லை—இந்தியாவில் நில உடைமை உறவுகள் நில மான்ய முறையில் அமைந்திருந்தன என்று கருதலாமா, அப்படியானால் அந்நில மான்ய முறையின் இயல்பு என்ன? அதற்கு முன்னுள் நிலவிய நில மான்ய முறையிலிருந்து அது எவ்வகையில் வேறு பட்டிருந்தது? மேலும், இந்த நில மான்ய முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தால், அவை யாவை?

இடைக்கால இந்தியாவில் உபரி உற்பத்தி நடுவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது; தவிரவும், அதில் ஒரு பகுதி அவர்களால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது என்பதில் ஐயமில்லை. எந்த விதமான கணிப்பிலும், ஜமீன்தார்கள்

உண்மையிலேயே வேளாண்மையையும், கிராமப்புற வாழ்க்கையையும் கட்டுப்படுத்தினுலும், உபரியில் பெரும் பகுதி அமீர்களுக்குச் சென்றது. ஜமீன்தாரின்றி அமீர் தனித்து வாழ முடியவில்லை. நில மான்ய முறை பற்றி முற்றிலும் வேறு விதமான கருத்தை ஏற்றுக் கொண்டால்தான் இந்த முறையை நில மான்ய முறை என்று வர்ணிக்கக் கூடும். இந்த முறையில் (1) உற்பத்தியின் மிகப் பெரிய ஆதாரம் விவசாய விளைச்சல். (2) உபரி உற்பத்தியில் கணிசமான பகுதி படைபலம் கொண்ட வகுப்பினரால் கைப்பற்றப்படுகிறது. (3) உபரியை கைப்பற்றிக் கொள்ளும் வகுப்பினரின் பொருளாதார சக்தி படை பலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று. அது உற்பத்தி முறையில்—விவசாய விளைச்சலிலோ அல்லது அதற்குத் துணையான கைவினைப் படைப்பிலோ—அவ்வகுப்பினர் ஏற்ற பங்கையும் சார்ந்திருந்தது. (4) ஆதிக்கம் செலுத்திய வகுப்பினர் தங்கள் பிரிவில் மாற்றங்கள் ஏற்பட்ட பின்னரும் கட்டுப்பாட்டுடன் இருந்தனர். இவ்வகுப்பினர் நிலத்தில் உழுது பயிரிடுபவர்களாலும், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களாலும், கவிழ்க்கப்படுவதற்குச் வாய்ப்பே கிடையாது என்பதையும் காண்கிறோம். தவிர, இவர்கள் சமூகத்திலும், அரசியலிலும், ராணுவத்திலும் முதன்மையாக இருப்பதையும் காண்கிறோம். முடிவில் பல விதங்களில் தங்கள் சமூக நிலைக்காக பேரரசரையோ அல்லது அரசனையோ அண்டியிருந்தாலும் பேரரசு முறையே இந்தக் குறிப்பிட்ட சமூகத்தினரின் ஆதரவை நம்பி இருந்தது. இந்த ஒரு உட்கருத்திற்காகவே நாம் இம்முறையை நில மான்ய முறை என்று சொல்லலாம்.

ஆனால் நிலமான்ய முறை என்ற சொல்லை மேற்கு ஐரோப்பிய வழக்கில் உபயோகிப்பீர்களாயின், இங்கு அது போன்ற நில மான்ய முறையின் சிறப்பியல்புகள் எதுவிமில்லை என்பது வெளிப்படை. பேராசிரியர் ஆர். எஸ். சர்மா அவர்

களைப் பின்பற்றி நிலமான்ய முறைமை (feudalism) என்ற சொல்லைப் பயன்படுத்தலாம் என்றே நானும் கருதுகிறேன். பின்னால் மாற்றங்கள் நிகழும் சமுதாய வளர்ச்சியின் ஒரு கட்டத்தின் முக்கியமான சிறப்பியல்புகளை நாம் புரிந்துகொள்ள இது உதவியாக இருக்கிறது. ஆசிய கண்டத்தின் உற்பத்தி முறை என்ற விதிமுறையை நான் நிராகரிப்பதற்கு இதுதான் காரணம். சமுதாயப் பொதுவுடைமையுரிமை இருந்தது என்பதற்கு ஆதாரமே இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. கிராமச் சமுதாயம் எது? அந்தக் கிராமம் **பய்யாசாரா** கிராமமாகவோ அல்லது கூட்டு வாரிசுதார்களின் கிராமமாகவோ இருந்தால் கிராமச் சமுதாயம் உண்மையில் சொத்துரிமையாளர்களின் சமுதாயம்தான். நிலங்களின் பூரண உரிமையைப் பெற்றிருந்த கிராமத் தன்னாட்சி அமைப்பையோ அல்லது சமுதாயத்தையோக் குறித்து நமக்குச் சான்றுகளே கிடையாது.

இடைக்காலத்திய முறை "கிழக்கத்தியக் கொடுங்கோன்மை" என்று கருதப்பட்டது. கிழக்கத்தியக் கொடுங்கோன்மை என்பது வரம்பு மீறிப் பயன்படுத்தப்படும் சொல் என்று நான் எண்ணுகிறேன். இக்கிழக்கத்தியக் கொடுங்கோன்மைக் கோட்பாட்டைக் குறித்து மிகவும் சுவையான மறுப்புகளை 1743 லிருந்து 1793 வரை இந்தியாவுக்கு வருகை புரிந்த பிரிட்டிஷ்காரர்களின் எழுத்துக்களிலே காணலாம். இந்த ஐம்பது வருட காலத்தில் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் குறித்து மிகவும் விரிவாக விவாதித்துள்ளனர். ஆடம் ஸ்மித் அவர்களுக்கு முற்பட்ட காலத்தில் ப்ளாக்ஸ்டன் அவர்களின் சொத்து பற்றிய கருத்தை ஒப்பு நோக்கினீர்களேயாயின்—ப்ளாக்ஸ்டன் அவர்களின் விளக்கங்கள் ஆடம் ஸ்மித் அவர்களுக்கு முன்பே எழுதப்பட்டது என்பது நீங்கள் அறிந்ததே—அக்கருத்துக்கும் இங்கு நிலவி வந்த சொத்து பற்றிய கருத்தும் மிகவும் ஒத்திருந்தது என்பதைக் காண்பீர்கள். இக்

கருத்தின்படி, சொத்து தனிப்பட்டவரின் ஏகபோக உரிமை யல்ல, அடிப்படையில் நில மான்ய முறை உரிமைதான். சொத்து என்பதற்கு தனி உடைமையாளர்களின் விளக்கம் அதை விருப்பம்போல் உபயோகிக்கவும், வீணடிக்கவும் (right to abuse) விற்கவும், கொடுக்கவும் செய்யலாம் என் பதாகும். இங்கே 'வீணடிக்கவும்' என்பது மிகவும் மதிப்புள்ள சொல். பிரிட்டிஷ் சட்ட நிபுணர்களின் கருத்தை ரிகார்டோ அவர்களின் தத்துவங்கள் கவர்ந்ததன் விளைவாகப் பிறந்ததே இச்சொல், ஏனெனில், முதலாளித்துவத்திற்கு முந்தைய காலத்தில் சொத்தை வீணடிக்கும் உரிமை அங்கீகரிக்கப்பட வில்லை. இடைக்காலத்திய இந்தியாவில் ஜமீன்தார் சொத்து விஷயத்தில் தனி உரிமை பெற்றிருந்தார். ஆனால் அதே சமயம் வேளாண்மை தொடர்ந்து நடப்பதும் நல்ல பயிர் விதைப்பும் **(ஜின்ஸ்-ஏ-கமீல்)** ஜமீன்தாரு டைய கடமையாக இருந்தது. முதலாளித்துவ முறையில் இது மாதிரி ஒன்றை ஒன்று தழுவியதும், ஒன்றை மற்றொன்று ரத்து செய்வதுமான இந்த உரிமைகளில் மாற்றம் ஏற்படுகிறது. முதலாளித்துவத்திற்கு முன்னர் இருந்த உறவு முறையிலி ருந்து வரி விதித்தலும் முற்றிலும் மாறுபட்ட உருவத்தைப் பெறுகிறது. முகலாயர் காலத்தில் சொத்து பெற்றிருந்த உரு வகமும், ஆடம் ஸ்மீத் அவர்களுக்கும் இயலாட்சியாளர்களுக் கும் முன்பே ப்ளாக்ஸ்டன் வரையறுத்த சொத்தின் உருவ கமும் மிகவும் ஒத்திருப்பதைக் காண்பதனால், முகலாய முறை தன் சிறப்பியல்புகளினால் நிலமான்ய முறையாகவும், முத லாளித்துவத்திற்கு முற்பட்டதாகவும் இருந்தது என்ற கருத் தைத் தெரிவிக்கிறேன்.

இடைக்கால இந்தியாவில் நில உடைமை உறவுகளின் திட்டவட்டமான அம்சத்தையே எடுத்துக்கொண்டால் சிக்கல் இன்னும் தீவிரமாகிறது; ஏனெனில் ஆளும் வகுப்பினரிடையே —மிகுதியான உற்பத்தியின் பலன்களை அனுபவிக்கிற வகுப்பி

னரையே குறிப்பிடுகிறேன்—இரு வெவ்வேறு தனிப் பகுதி களைக் காண்கிறோம். ஒன்று பிரபுக்கள் என இடைக் காலத்திய வரலாற்று ஆசிரியர்களால் குறிக்கப் பட்ட பிரிவினர்; அக்காலத்தியப் பாரசீகச் சொல்லை உப யோகித்தால் 'உமரா' (அமீர் என்பதன் பன்மை). இரண்டா வது, பரம்பரையாக நிலத்தை ஆண்டு வந்த பிரிவினர்— அவர்கள் குடி படைத் தலைவர்களாக் இருக்கட்டும், அல்லது பலத்தரப்பட்ட நடுவர்களாகவோ அல்லது வெவ்வேறு வித மாக வர்ணிக்கப்படும் நிலச் சொந்தக்காரர்களாக இருக்கட் டும் இவ்விரு பிரிவினரும் பின்னர் ஒன்று கலக்கத் தொடங்கி ஒருவரை மற்றொருவர் ஆதிக்கம் செய்யும் உறவு முறையை யும் அமைத்தனர் என்றாலும் தங்களுடைய தனித்தன்மையை இழக்கவில்லை: இது தோற்றுவிக்கும் அநேக விதமான பிரச்சினை களுக்கு இந்தக் குறுகிய காலத்தில் நான் விடை காண முயற் சிக்கப் போவதில்லை. உங்களுக்குத் திருப்தி தரும் வகையில் பதிலறுப்பது இயலாதென்பது ஒருபுறமிருக்க எனக்கே நிறைவ ளிக்கும் இக்கேள்விகளிக்கு விடை கூறும் தகுதி இல்லை என்பேன்.

இப்பொழுது எழும் கேள்விகள் இவையே—இது இரட்டி படிச் சுரண்டல் முறையாகுமா? இரட்டிப்புச் சுரண்டல் முறை யாகாது என்றால் இவ்விரு தனிப்பட்ட வகுப்பினரிடையே நிலவிய அடிப்படை உறவு முறை என்ன? அது எவ்விதம் இந் திய ஆட்சி அமைப்பையும் சமூகத்தையும் பாதித்தது? இது இயல்பாகவே நம்மை நில உடைமை வரலாற்றின் அடுத்த பிரச்சினைக்கு இட்டுச் செல்கிறது. சமுதாய உறவுகள் விஷயத் தில் இடைக்காலத்திய அரசின் நிலை என்ன? இவ்விரு பிரிவு களில் ஒரு பிரிவு செல்வாக்கு மிகுந்திருந்ததா? அரசாங்கம் ஏதாவது ஒரு நில உடைமை வகுப்பினருக்கு உதவி செய்து கொண்டிருந்ததா? இந்தப் பலவிதமான பிரிவுகளிடையே இருந்த முரண்பாடுகளின் தன்மை என்ன? இடைக்கால

திய சமூக நிலையை இந்த முரண்பாடுகள் எப்படிப் பாதித்தன, அவற்றின் மொத்த விளைவு என்ன?

சில காலம் முன்பு வரை, இந்தியாவில் சமூக உறவுகள் அடிப்படையில் ஒரே சீராக இருந்தன என்றும், மாறுதல் ஏதும் இல்லை என்றும் சந்தேகமறக் கருதப்பட்டு வந்தது. இக் கருத்து முதலில் ஆங்கிலேய எழுத்தாளர்களால் தெரிவிக்கப் பட்டு பிறகு டாக்டர் கே. எம். அஷ்ரஃப் அவர்களாலும் ஒரு மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டது. இக்கூற்றை ஒரு பரந்த நோக்கில் ஏற்றுக் கொள்ளக் கூடுமாயினும் நம்முடைய நோக்கு எவ்வளவு விசாலமானது என்ற வினா எழுகிறது ஏனென்றால் ஆளும் வகுப்பினரிடையிலும் உயர் குடி மக்களி டையிலும் அவர்கள் அந்தஸ்தில், கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டத்திற்குச் செல்வதும், அல்லது மேலிருந்து மறுபடியும் கீழே செல்வதுமான பல விதமான மாறுதல்கள் நிகழ்வதை யும் அதன் காரணமாக அடிக்கடி ஏற்படும் சண்டை பூசல்கள் ராணுவப் போராட்டமாக உருவெடுப்பதையும், சமயங்களில் அவை அரசு—அல்லது அரசாங்கம் என்றே வைத்து கொள்ள லாம்—இதில் குறிப்பிடத்தக்க பங்கேற்பதையும் தவிர, அடிப்ப டையில் பொருளாதாரப் போட்டியுடன் நின்று விடுவதையும் காண்கிறோம். கவனத்துடன் பார்த்தோமானால் இம்மாறுதல் கள் நமக்குத் தெரிய வருகின்றன. ஆகவே நாம், இனி, சமத் தன்யுடைய இடைக்காலச் சமூகத்தைக் குறிக்கும் பழைய ஊகத்தைஏற்க முடியாதவர்களாக இருக்கிறோம். அது மாறிக் கொண்டிருந்ததொரு சமூகமே. ஆயினும், நமக்கு இன்னமும் இம்மாற்றத்தின் தன்மை என்ன, அதன் போக்கு என்ன, எந்த காரணக்கூறுகள் இந்த மாற்றத்திற்கு ஏதுவாக இருந்தன என் பவை புரியவில்லை. ஆனால், நமக்குத் தோன்றும் பொதுவான வர்ணனைக் குறிப்புகள் நாம் அடுத்த பிரச்சினைக்குச் செல்ல வழி செய்கின்றன.

இச்சமூகம் தன்னைத் தானே மாற்றிக் கொள்ளும் திறன் படைத்ததா? இக்கேள்வி பல அறிஞர்களால் பல்வேறு முறைகளில் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அடிப்படையில் பிரச்சினை ஒன்றே. ஆங்கிலேயர் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இந்தியா அல்லது இந்தியச் சமூகம் முதலாளித்துவ சமூகமாகவோ அல்லது நவீன தொழிற் சமூகமாகவோ வளர்ந்திருக்குமா என்று சிலர் கேட்கிறார்கள். வரலாற்று மாணவர்களாகிய நாம் வரலாற்றின் 'இப்படி நடந்திருந்தால்' என்ற வாதத்தை ஏற்பதில்லை. வரலாற்றில் 'இப்படி நடந்திருந்தால்' என்று எண்ணிப் பார்ப்பது பயன் தராது; அதுமட்டுமன்று அவ்விதம் செய்வது வரலாற்று ஆசிரியர்களின் தன்மைக்கு ஒவ்வாததும் தவிர அவர்களுடைய தொழில் முறைக்கு முரணானதாகும்.

இவ்விதம் கூறிய பின்னரும் நான் இக்கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்: ஆங்கிலேயர்களும், ஏனைய ஐரோப்பியர்களும் குறுக்கிடாமல் இருந்திருந்தால் நம் சமூகம் தொழிற் சமூகமாகவோ அல்லது முதலாளித்துவ சமூகமாகவோ அல்லது புது மாதிரியான நவீன சமூகமாகவா தோற்றமெடுத்திருக்குமா? அவ்விதம் நிகழ்ந்திருக்குமா, இருக்காதா என்பது வேறு கருத்தாகும். வினா என்னவென்றால் நம் சமூகம் இம்மாதிரியான திறனைப் பெற்றிருந்தா, சமுதாய மாற்றத்துக்குரிய வித்துகள் அதனிடம் இருந்ததா அல்லது மாறாத சமநிலை உடையதாக இருந்ததா என்பது தான்.

இப்பிரச்சினையை விவாதிக்க அணுகும்போது அநேக விஷயங்கள் நம் கவனத்துக்குரியவையாகின்றன. உதாரணமாக 19-ம் நூற்றாண்டில் பல வகைப்பட்ட எழுத்தாளர்களால் மிகவும் தீவிரமாக எழுப்பப்பட்ட பிரச்சினை—இந்தியாவில் கிராம சமுதாய அமைப்பு இருந்ததா? இருந்திருந்தால் அதன் இயல்பு என்ன? அது தெரிவித்தது யாது? இடைக் காலத்தில் நிலம் கூட்டுரிமையாக இருந்தது என்று அறிவித்

ததா அல்லது அடிப்படையில் நிலம் தனியாரால் ஆளப்பட்டதா? விவசாயத்தில் தன்னிறைவும், கிராமத்திலோ அல்லது சில கிராமங்கள் கூட்டாகச் சேர்ந்ததொரு அமைப்பிலோ தன்னிறைவும் உண்மையாகவே இருந்ததா? இல்லாவிடின், உள்நாட்டு அல்லது கடல் கடந்த வியாபாரம் பெருமளவில் நடைபெற்றதா? பொருளாட்சி நாணயப் பொருளாட்சியாக மாறிக் கொண்டிருந்தா? நாணயப் பொருளாட்சி வளர்ந்திருந்தால் அவ்வளர்ச்சி எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது? கி.மு. ஐந்தாம் நூற்றுண்டிலிருந்து பணப் புழக்கம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனுல் இதிலிருந்து பொதுவாக தேசமும், குறிப்பாக விவசாய சமூகமும் ஒரு முழுமையான நாணயப் பொருளாட்சியை விருத்தி செய்திருந்தன என்று தீர்மானிக்க இயலாது. பணத்தின் பங்கு எந்த மாதிரியானது? அது கொடுக்கல் வாங்கலுக்கு ஒரு கருவியாக மாத்திரம் இருந்ததா? அல்லது கொடுக்கல் வாங்கல் பண்டமாற்று முறையில் நடைபெற்றதா? அல்லது தற்காலத்தைப் போல் நாணயப் பொருளாட்சி முக்கியமானதொரு பங்கேற்றிருந்ததா? இது சம்பந்தமாக ஒரு விஷயத்தை நாம் மறக்கலாகாது. உற்பத்தி பெருகி விரிவடைந்து கொண்டிருந்ததா? விவசாய உற்பத்தி முறையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருந்ததா! மாற்றத்திற்குத் துணை புரிந்த காரணக் கூறு ஏதாவது உண்டா? நில உடைமையில் சீர்குலைவு இருந்ததா? நில உடைமைச் சீர் குலைவு இருந்திருந்தால் அதன் பொருள் என்ன? விவசாயம் வீழ்ச்சியடைந்தது என்பது அதன் பொருளா? அல்லது நில உடைமை விவகாரங்களின் வீழ்ச்சி என்பது பொருளா?

இந்தச் சந்தர்ப்பத்தில். இது போன்ற அவையினரிடம் கிராமத் தொழில்களின் முக்கியத்துவத்தைப் பற்றி நான் அதிகம் வலியுறுத்தத் தேவையில்லை. இந்தியக் கிராமச் சமுதாயத்தின் ஏற்றம் கிராமத் தொழில்களை உயிர்ப்பிப்பதுடன்

பிணைந்துள்ளது என்ற முடிவுக்கு காந்திஜி வந்தது ஏன் என்பது நாம் குறிப்பாக கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயங்களில் ஒன்று. காந்திஜி பிறந்த சமயம் கிராமத் தொழில்களின் நினைவு மிகத் தெளிவாகவும், அவற்றின் சரிவு மிகவும் வெளிப்படையாகவும் இருந்தது என்றும், அதனாலேயே கிராமங்களைத் தங்கள் கால்களில் ஊன்றி நிற்கச் செய்ய, கிராமத் தொழில்களைப் புதுப்பிக்க வேண்டும் என்று அவர் முடிவெடுத்தார் என்று நாம் அர்த்தம் செய்து கொள்ளலாமா? அப்படியானால் நவீனப் பொருளாதாரச் சூழலில் இந்தியா சிக்குவதற்கு முன்பு இந்தியாவிலிருந்த கிராமத் தொழில்களின் விரிவையும், முக்கியத்துவத்தையும் பற்றி நாம் உணர்ந்திருக்கிறோமா? கிராமத் தொழில்களின் தன்மையையும் விஸ்தீரணத்தையும் பற்றிக் கூடவே ஆராய்ந்தறியாத வரையில் நில உடைமை உறவுகள் சம்பந்தமான எந்த விதமான ஆய்வும் நிறைவுள்ளதாக இராது என்பது தெளிவு.

இப்பொழுது நாம் முன்னர் கிளப்பிய பிரச்சினைக்கே-சிறிது மாறுதலுடன்-திரும்பச் செல்கிறோம். மொத்தத்தில் அரசாங்க முறையும், நிலையில்லாத அரசாங்கக் கொள்கைகளும் நில உடைமை உறவுகளின் வெவ்வேறு துறைகளை எவ்வாறு பாதித்தன? நமது தேசப் பொருளாட்சி இடைக் காலத்திலும், இன்று இன்னமும் உள்ளது போலவே, நில உடைமைப் பொருளாட்சியாகவே இருந்திருக்கிறது என்பது வெளிப்படை. மேற்கத்திய நாடுகளில் நேர்ந்தது போன்ற சிரமம் நமக்கு இல்லை. அங்கு விவசாய உற்பத்தி ஏற்கனவே பீடபூமிக்குச் சென்று மேலும் அதை விஸ்தரிக்கச் செய்ய இடமில்லாமல் போயிற்று. ஆறு வருஷங்கள் முன்பு வரை கூட நாம் விரிவாகவும் பரவலாகவும் பயிரிடுவதன் மூலம் நம்முடைய நிலங்களின் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற உறுதியுடனிருந்தோம். இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் ''அதிக உணவு உற்பத்தி

செய்க'' என்ற கோஷத்திற்கு, நம் வீட்டுப் புல்வெளிகளைத் தோண்டுவதுதான் பொருளாக இருந்தது: பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறெங்கோ புல்தரை இருந்தால் கோதுமை விதைக்கப்பட்டு பயிராக்கப்பட்டது. இடைக் காலத்தில் முழுவதும் இதே கருத்தைக் காணலாம். முகலாய தஸ்தா வேஜுகளில் எஞ்சியிருப்பவை பலவற்றில், விளைச்சலில் இருக்கும் பரப்பை அதிகப்படுத்த, இடையறுமல் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதைக் காணலாம். ''அதிகமான நிலங்களில் குடியேறுக'' என்பதே அவற்றில் காணப்பட்டுள்ள வாசகம். இதன் தெளிவான கருத்து மேலும் அதிகமான பிராந்தியங்களை வேளாண்மை செய்யவேண்டும் என்பதே. பயிர் நிலங்களை விஸ்தரிக்க வேண்டும் எனும் தங்கள் கொள்கைக்கேற்ப சக்கரவர்த்திகள் ஜமீன்தாரி உரிமைகளை, காடுகளையும் தரிசு நிலங்களையும் பயிரிடக்கூடியவர்களுக்குத் தாராளமாக வழங்கினர். பெரும்பான்மையான **மதாத்-ஏ-மாஷ்** மான்யங்கள் (தர்ம காரியங்களுக்காக அளிக்கப்பட்ட வரியில்லாத மான்யங்கள்) பயிரிடப்படாத நிலங்கள் சம்பந்தப்பட்டவையாகவே இருந்தன. ஆகவே, நிலஉடைமை உறவுகளில் அரசின் செல்வாக்கு நாம் விசாரப்பட வேண்டிய இன்னொரு பிரச்சினை. இதற்கு நாம் சரியான விடையறியோம் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இவை நிலஉடைமை உறவுகளில் நாம் சமாளிக்க வேண்டிய பெரும் பிரச்சினைகளாயினும் நாம் முற்றிலும் அவ்வாறு சமாளிக்கக்கூடிய நிலையில் இல்லை. நம்முடைய தோல்விக்கு முக்கியக் காரணம் நமக்குள்ள ஆதாரச் சாதனங்களின் தன்மையே. அனைவரும் அறிந்திருப்பது போல், இந்தப் பிரச்னைகள் இடைக் காலத்திய அறிஞர்களின் கவனத்தைச் சிறிதும் கவரவில்லை. ஆகையால் இடைக் காலத்தில் எழுத்தாளர்கள், பொதுவாக, இப்பிரச்சினைகளைக் குறித்த தங்கள் கருத்துக்களைத் தெளிவாக்கவில்லை. நிலஉடைமை உறவுகள்

பற்றிய குறிப்புகள் தென்படும் இடங்களிலும், அவை பரவலான விமரிசனமாகவே இருக்கின்றன—நாடாளுமன்றத்தில் ஒரு தனி நபரின் சிறிய எல்லைக்குட்பட்ட கணிப்புகளின் விருப்பு வெறுப்புகள் அகில இந்தியாவின் பொதுவான நிலையைக் குறிப்பதாகச் சொல்லப்படுவதை நாம் கேட்டுக்கொண்டிருப்பது போல்தான். இவ்விதமான கூற்றுகளும் விமரிசனங்களும், நாமே நாள்தோறும் தெரிவிக்கும் அபிப்பிராயங்களும் நிச்சயமாக அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடாகவோ அல்லது புள்ளி விவரங்களை அடித்தளமாகக் கொண்ட ஆராய்ச்சியாகவோ இருக்காது.

உங்களுக்கு இன்னொரு உதாரணம் கொடுக்க என்னை அனுமதிக்க வேண்டுகிறேன். நம்மில் சிலர், நில உடைமை உறவுகளில் கடந்த 500 ஆண்டுகளாக ஏதும் மாறுதலில்லை என்று நினைக்கலாம். ஆனால் உண்மையில் இந்திய நிலைமை மிகவும் தீவிரமாக மாறியுள்ளது. முழுமையானதொரு புரட்சியே நிகழ்ந்திருக்கிறது, பழைய எண்ணங்கள் மறைந்து புதியதொரு சமுதாயமே பிறந்திருக்கிறது. மாற்றத்தின் தன்மை, பேச்சாளர் எந்தப் பிரிவைச் சார்ந்திருக்கிறாரோ அதற்குத் தகுந்தாற்போல், விதம் விதமாக வர்ணிக்கப்படுகிறது. அவர், செல்வாக்கு இழந்து கொண்டிருக்கும் ஜமீன்தார் வகுப்பைச் சார்ந்திருந்தால் அனுமானங்கள் வருமாறு இருக்கும். நேர்ந்ததென்ன? எழுத்தறிவும் படிப்பும் இல்லாத மக்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்றனர்; நாட்டில் சட்டமோ ஒழுங்கோ இல்லை. ஆனால் புதிதாக முளைத்திருக்கும் பணம் படைத்த விவசாய வகுப்பைச் சார்ந்திருப்பின் அவர் கூறுவார்: ஆகா! எத்தகைய சமுதாய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது! நிலமில்லாத உழவர் குலத்தைச் சேர்ந்தவராகயிருந்தால் அவர் இச்சமுதாய மாற்றத்தைக் குறித்து தமது பூரண அதிருப்தியையே வெளியிட்டிருப்பார். இன்றும், புள்ளி விவரங்கள் சேகரிக்க வசதிகளிருந்தாலும், அனுபவ பூர்வமாகக்

கணிப்புகளைச் செய்ய வாய்ப்பிருந்தும், சமூக விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றிருந்தாலும், பொது ஜனத் தொடர்புக்கான போக்குவரத்து முதலிய சாதனங்கள் இருந்தும், இம்மாதிரி யான மனோபாவங்கள் காணப்படலாம்.

ஆகவே, இடைக் காலத்திய பார்வையாளருக்கு அளவுணர்வோடு அபிப்பிராயம் கூறுவது இயலாது என்று நான் நினைக்கிறேன். நான் இதை அழுத்தமாகக் குறிப்பிடு வதன் காரணம், சமகாலத்தவர்களினுடைய கருத்துக்களை யொட்டியோ அல்லது சமகாலத்தவரின்—குறிப்பாக வெளி நாட்டு பயணிகளின்-பொதுப்படையான அபிப்பிராயங்களைத் தழுவியோ வரலாற்று நூல்களை எழுதுவது வழக்கமாக இருப் பதுதான். எடுத்துக்காட்டாக, பெர்னியர் அவர்கள், காத ரீன் மேயோ அவர்களை விட அதிக ஆற்றல் உடையவர் என்று கருத ஏதாவது காரணம் இருக்கிறதா? உழவர் குலமானது, சாம்ராஜ்யத்தில் இதைவிட, சுயேச்சை அரசர்களின் கீழ் மேன்மையாக இருந்தது எனும் பெர்னியர் அவர்களின் கூற்றை ஏற்பது கடினமாகவே இருக்கிறது; ஏனெனில் இப் பிரெஞ்சு அறிஞரின் தீர்ப்பை, அவருக்கு நிலமான்ய முறை யின் மீதிருந்த பற்றுதல் பாதித்தது மட்டுமின்றி, நமக்குக் கிடைக்கும் அசல் தஸ்தாவேஜிகள் சுட்டிக் காட்டுவதைப் போல், இவ்வரசர்களின் பிரதேசங்களில் உழவர்களுக்கு விதிக்கப்பட்ட நில வரிகளும் ஏனைய வரிகளும் அம்மன்னர் களின் பிரதேசங்களை[1] தொடர்ந்தாற்போல் உள்ள வெளி இடங்களில் இருந்தவற்றைக் காட்டிலும் குறைவாக இல்லை. ஆயினும் காதரீன் மேயோ அவர்களின் முடிவுகளை ஒரேயடி

1 அம்பர், ஸவாய், ஜய்ப்பூர், பர்கானக்களின் அர்ஸத்தாக் களை, சத்ஸா மற்றும் ஹிந்தௌன் பர்கானக்களுடைய அர்ஸத்தாக்களுடன் ஒப்பிட்டால் தீர்வை விகிதத்தில் பொதுவானதொரு ஒற்றுமையைக் காட்டுகின்றன.

யாகப் புறக்கணித்து பெர்னியர் அவர்களின் அபிப்பிராயங்களைப் புனிதமானதாகக் கருதுகிறோம்.

நில உடைமை உறவுகள் போன்றதொரு சிக்கலான பிரச்சினையை, இந்தியர்களோ, அல்லது இந்தியாவுக்கு வந்து பார்வையிட்ட வெளிநாட்டினரோ தெரிவித்த அபிப்பிராயங்களின் அடிப்படையில் நிஜமாகவே புரிந்துகொள்ள முடியுமா? மாவட்ட அதிகாரிகளின் அறிக்கைகளைப் படிக்கும் வாய்ப்பை நான் பெற்றிருந்தேன்; தற்கால இந்திய வரலாறு நிபுணர்களும் இவற்றின் பற்பல எடுத்துகாட்டுகளைப் பார்த்திருக்க வேண்டும் என்பது நிச்சயம். அவைகளைக் கூர்ந்து பார்த்தால் அந்த அறிக்கைகளில் பல எவ்வளவு மோசமானவை என்றும், எப்படித் தவருன விஷயங்களையே தர முயற்சிக்கின்றன என்றும் தெரிய வரும். நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பணியில் ஈடுபட்டிருப்பவகர்ளின் அறிக்கைகளுக்கே இந்த நிலை, ஆகவே, எவர் தெரிவிக்கும் எந்தக் கருத்தும் எவ்வளவு தூரம் உண்மை என்றறிய கூர்மையாக ஆராய வேண்டும் என்று நாம் சொல்வதில் நியாயமிருக்கிறது. இந்தியர்களோ அல்லது அந்நியர்களோ தெரிவிக்கும் பொதுப்படையான விளக்கங்களையும் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வதில் எனக்கேற்படும் சிரமத்தை நீங்களே காணலாம். கீழ்வருவன போன்ற கூற்றுக்களை எடுத்துக்கொள்ளுங்கள்: ‘குறிப்பிட்ட ஓர் அரசரின் ஆட்சியில் அனைத்தும் மேன்மையாக இருந்தது. ஆனல் இன்னுரின் ஆட்சியில் எல்லாமே மோசம், நம்மில் அநேகருக்கு நம்முடைய காலத்திற்கு முற்பட்டு நடந்தவை எல்லாம் நன்மையாகத் தோன்றுவது நாம் அறிந்ததே. பழைய நாட்கள் எப்பொழுதும் ''கடந்த நல்ல நாட்கள்'' என்றும், தற்காலம் எப்பொழுதும் ''மோசமான நிகழ்காலம்'' என்றும் கருதப்படும். உண்மையாகவே, இடைக்காலத்திய இந்தியாவில் நில உடைமை உறவுகளைப் பற்றி அறிய, நாம் எதற்காக நேரத்தையும் சக்தியையும் வீணடித்துக் கொண்டு இது

போன்ற கருத்துக்களையும் விளக்கங்களையும் புரிந்து கொள்ள முயல வேண்டும்? தற்காலச் சமுதாய முறையை அறிவதற்கு இம்முறையைத் தவிர்க்கிறோமென்றால், இடைக் கால சமுதாய நிலைமையை அறிய மாத்திரம் இது சரியான வழியாகுமோ? நாம் செய்வதென்ன? இதை ஏற்றுக்கொள்ளாவிடின் செல்வதெங்கே?

நம்முடைய முன்னோர்களின் பாணியிலேயே சரித்திரத்தை ஆராய்ந்து கொண்டிருக்கலாம் என்ற யோசனையை எடுத்துக்கொள்ளலாம். இடைக்காலத்திய இந்திய சரித்திரத்தின் ''இடைவெளி''களை இட்டு நிரப்பிக் கொண்டிருப்போம், ஒரு அரசருக்கு ஒரு தனி நூல் வீதம். எதைப் பற்றி எழுதப்படாமலிருக்கிறதோ அவை ''இடை வெளி'' என்று சுலபமாக இனம் கண்டு கொள்ளலாம். இவற்றின் அத்தியாயங்கள் தயார் செய்யப்பட்டே இருக்கின்றன. முதலாவது வம்ச பரம்பரை, பிறப்பு, பால பருவம். இரண்டாவது பட்டமேற்பதும் அதிலுள்ள சிக்கல்களும், மூன்றாவது போர்களும் வெற்றிகளும்; நான்காவது சிறிய சண்டைகளும்; கலகங்களும்; ஐந்தாவது நிர்வாகம்; ஆறாவதாக அக்காலத்தியச் சமுதாயமும் பண்பும். இதுபோன்ற ஆய்வுகளின் மதிப்பைக் குறைத்துக் கூறுவது என் நோக்கமல்ல. இம்முயற்சிகள் இல்லையென்றால் நாம் கூடி உட்கார்ந்து புதிய பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. இன்று நாம் முற்றிலும் புதிதானதொரு ஆராய்ச்சி முறையைப் பற்றிப் பேச முடிகிறதென்றால் அதற்குக் காரணம் நமது முன்னோடிகள் ஏற்கெனவே செய்துள்ள சிறப்பான ஆராய்ச்சிகளே என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் என்றும், எப்பொழுதும் இது போலவே இடைவெளிகளை நிரப்பிக் கொண்டு பழைய வழிகளிலேயே சரித்திரத்தை எழுதிக் கொண்டிருக்கப் போகிறோமா? ஏனெனில், இம்மாதிரியான இடைவெளிகளை நிரப்பப் போவதில்லை என்றால், நமக்

கிருக்கும் வேறு மாதிரியான ஆதாரச் சாதனம் என்ன? ஆதாரச் சாதனங்களை நாம் உண்டாக்கவும் முடியாது; அவ்விதம் செய்தாலென்ன என்றே நான் ஏங்குகிறேன். அவ்விதம் செய்தால் நாம் வரலாற்று வல்லுனர்களாக இருப்பது நின்று விடும் அவ்வளவே. இப்பொழுது நாம் செய்யக் கூடியதென்ன?

ஆதாரச் சாதனங்களின் தன்மை நமது ஆராய்ச்சியின் ஒரு பகுதியை நிர்ணயித்தாலும், நாம் முன்னேறி புதிய முறைகளை உருவாக்க வேண்டும்; அப்போதுதான் நம்மை வாட்டும் கேள்விகளுக்கு, அதே ஆதாரச் சாதனத்தைக் கொண்டு பதில் தர முடியும். இதன் கருத்து ஆதாரப் பொருட்களை இன்னொரு முறை கவனித்து புதிய விசாரணை முறைகளை முயற்சி செய்யவேண்டும் என்பதே. உங்கள் வரலாற்றுத் தொடர்களை அளவு சார்ந்த மதிப்பீட்டுக்கு (Quantitative analysis) உட்படுத்துவது ஒரு வழி. இதன் மூலம் பண்பு வழிச் சார்ந்த கூற்றுக்களை (qualitative Statements) அளவு சார்ந்த மெய்ச் செய்திக் குறிப்புக்களுடன் (actual quantitative data) ஒப்பிட்டுச் சரி பார்க்கலாம். இந்த அவையினரின் முன்பாக ஷெர்ஷா அவர்களின் உதாரணத்தை எடுத்துக் கூறுவது அவசியமில்லை என்று அறிந்துள்ளேன். இருப்பினும், ஷெர்ஷா அவர்களின் ஆட்சியைப் பற்றிய முதன்மையான ஆதரவாகிய அப்பாஸ் ஸர்வானி அவர்களின் நூலை எடுத்துக் கொண்டால் கடைசி சில பக்கங்களில் ஷெர்ஷா அவர்களுடைய நிர்வாகத்தைப் பற்றிய செய்தி இருக்கின்றதென்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். காலஞ் சென்ற கே. ஆர். கனுங்கோ அவர்கள் ஷெர்ஷா எவ்வாறு தமது ராஜ்யத்தை நிர்வகித்தார் என்று வர்ணிக்க இச்செய்தியே அடி கோலியது. ஷெர்ஷா அவர்கள் தம்முடைய ராஜ்யத்தைப் பல **ஸர்க்கார்களாகப்** பிரித்திருந்தார் என்ற கூற்று இதில் உள்ளது. ஒவ்வொரு **ஸர்காரிலும் ஷிக்தார்—ஏ—ஷிக்தாரான்** ஒருவரையும், **முன்ஸீப்—ஏ—முன்ஸிஃபான்** ஒரு

வரையும் அவர் நியமித்தார். இதை ஆதாரமாகக் கொண்டு நம் கல்விமான்களிடையில் திரித்துக் கூறும் சாதுரியமிக்கவர் கள், ஷெர்ஷா அவர்கள் எவ்விதம் தமது ராஜ்யத்தை ஆண்டு வந்தார் என்பது பற்றி அழகிய வரை படங்களும் சித்திரங்களும் எழுதினர்கள். நானும் இவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளத் துவங்கினேன். பின்னர், எத்தனை பேர் **ஷிக்தார்—ஏ—ஷிக்தாரர்களாக** நியமிக்கப்பட்டார்கள் என்று பார்க்க எண்ணினேன். ஸர்வானியின் நூல் முழுவதி லும் கடைசி நான்கு பககங்களைத் தவிர வேறெங்கும் ஒரு தனி நபர் கூட இன்ன **ஸர்க்காரின் ஷிக்தார்—ஏ—ஷிக்தாரா ளுக** நியமிக்கப்பட்டதாக ஒரு குறிப்பும் கிடையாது. பல ரகப்பட்ட பட்டங்கள் கையாளப்படுகின்றன. **வலீ, ஹாகிம், அமீன்** முதலியவை. இத்தனை சொற்கள் பயன்படுத்தப் பட்டாலும், **ஷிக்தார்—ஏ—ஷிக்தாரான்** மாத்திரம் ஒரு சமயத்திலும் உபயோகப்படுத்தப்படவில்லை, அசல் ஆதாரங் களை நன்கு ஆலோசிக்காமல் எப்படி எல்லாவற்றையும் ஏற் றுக் கொண்டு வருகிறோம் என்பதற்கொரு உதாரணமிது.

அப்பாஸ் ஸர்வானி அவர்களின் புத்தகத்தை மிகக் கவனத்துடன் படித்தாலொழிய ஷெர்ஷா அவர்களின் ஆட்சி யைப் பற்றி நம்மால் எதுவும் அறிந்து கொள்ளவியலாது. அப்படியிருந்தும் அப்பாஸ் ஸர்வானி அவர்களின் இக்கருத்து, அளவு சார்ந்த பகுப்பிற்குட்படுத்தப்பட்டதும், நம் மனத்தில் ஐயத்தை உண்டாக்குகிறது. இப்போது நான் அவர் ஏன் இச்சொற்களைப் பயன்படுத்தினார் என்ற சர்ச்சையில் இறங் கப் போவதில்லை. உதாரணமாக, ஒரு வரலாற்றுத் தொடர் ஆசிரியர், உயர் குடி மக்களுக்கு இன்னின்னர் ஆட்சியில் இவ் விதம் நடந்தது என்று எழுதலாம். ஆனல் அக்கருத்துக்கள் நிகழ்ச்சிகளால் ருசுப்படுத்தப்பட வேண்டும். உதாரணததிற்கு என்னுடைய சக ஆசிரியர் டாக்டர். அத்தர் அலி ஔரங்க சீப் காலத்திலிருந்த பிரபுக்களின் பட்டியலைத் தயார் செய்து

அவர்கள் பதவியேற்றம் பெற்ற முறையையும் அவர்களடைந்த **மன்ஸப்**பின் தரத்தையும் நிரூபிக்க நிச்சயித்தார். இது மிகவும் கடினமான வேலை ஆயினும் ஒரு முறை இதைப் போன்ற பட்டியல் தயார் செய்யப்பட்டு விட்டால், அது நாம் தவறான பொதுப்படைக் கருத்துக்களை உதறித் தள்ள உதவுகிறது.

மிகைப்படுத்திக் கூறல் என்பது நாம் சமீபத்தில் பெற்ற பண்பு இல்லை. பல நூற்றாண்டுகளாகவே நமக்கு இதன் அனுபவம் உண்டு. நாம் அனைவருமே பொதுப்படையாகப் பேசுவதை விரும்புகிறோம். ஒரு குறிப்பிட்ட தருணத்தில் ஆசிரியருடைய மனோபாவம் என்ன, அவருடைய சரித்திர விருப்பு வெறுப்புக்கள் என்ன, அவருடைய சமகாலத்தவர் ஏற்காவிடினும் எவற்றை மனமார உண்மை என்று கருதுகிறார் என்பவற்றைப் பொறுத்திருக்கிறது இந்தப் பொதுப்படைக் கருத்துக்கள். மேலும் **பஜார்** வம்புப் பேச்சு என்ற விந்தையான நிறுவனம் வேறு இருந்தது. மேலை நாட்டினர் பலர் இவற்றை நம்பியதோடு மட்டுமின்றி அப்படியே அவற்றை எழுதினர். நாமும் கூட, ஒரு குறிப்பிட்ட நபருக்கு **பஜார்** வம்பைத் தவிர வேறு விதமான செய்திகளுக்கு வழியில்லை என்று நன்கு தெரிந்த பின்னரும், அவருடைய கூற்றை ஏற்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம் ஆகையால் ஒவ்வொரு அறிக்கையையும் கூர்ந்து கவனித்து உறுதி செய்ய வேண்டியுள்ளது. எல்லா அறிக்கைகளையுமே நம்பக் கூடாது என்று நான் கூறவில்லை. நான் சொல்ல விரும்புவதெல்லாம் இப்பொதுப்படைக் கருத்துக்களைத் தீவிரமான விமரிசனத்திற்கு உட்படுத்த வேண்டும் என்பதே (அ) அளவு சார்ந்த பகுப்பின் மூலமும் (ஆ) நடந்ததை உள்ளபடி பார்த்தவர்களின் கருத்துக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தும், பொதுப்படையாகத் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் நடந்த நிகழ்ச்சிகளால் நிரூபிக்கப்படுகிறதா என்று கவனிக்க வேண்டும். நாம்

கேள்விகள் கேட்கும் முறையின் மூலமே, நம்மை வாட்டும் பிரச்சினைகளின் தரத்தைப் பற்றியக் கொஞ்சம் தகவலாவது வரலாறுகள் கொடுக்கும்படி செய்யவேண்டும். உதாரணமாக பிரபுக்களில் எவராவது ஒருவருக்கும் ஆட்சித் தலைவர்களில் ஒருவருக்கும் இடையில் நிலவிய உறவைப்பற்றிக் குறிக்கும் வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கும் சம்பவங்களைப் பார்க்கலாம். உண்மைச் செய்திகளைத் திரட்டி, வகைப்படுத்தி ஆய்ந்தறிந்து பார்த்தால், அப்பொழுது, ஒருவேளை, நமக்குக்கிடைக்கும் உருவம் நம்பிக்கைக்குரியதாக இருக்கக்கூடும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஜமீன்தார்கள் அரசருக்குச் சாதகமாகவே அல்லது எதிராகவோ இருந்தார் என்ற நூலாசிரியர்களின் கூற்றுக்களை எதிர் கொள்ளுவோமாயின், தற்பொழுது மிகவும் முன்னேற்றமடைந்துள்ள பகுத்தறியும் முறையின் மூலம் சோதிக்கலாம். இதன் மூலம் உறவுகளின் வகை, தன்மை, பிரதேச வேறுபாடுகள், காலத்துக்குத் தகுந்தாற்போல் நிகழும் மாறுதல்கள் முதலியவைகளை வரையறுத்துக் கூற உதவியாக இருக்கும். நமக்கு மிகுதியாகத் தகவல்கள் கிடைத்துள்ள வருமான நிர்வாகத்தையும் இதே மாதிரியான பரிசீலனைக்குக் கொண்டு வர முடியும்.

நமது கவனத்தை வருமான நிர்வாகத்திலிருந்து நில உடைமைப் பிரச்சினைக்குத் திருப்பினாலும், வருமான நிர்வாகத்தைப்பற்றி ஆழ்ந்து ஆராய்வதே நில உடைமைப் பிரச்சினையைப் பற்றி உபயோகமான தகவல்களைத் தரக் கூடும். வருமான நிர்வாகத்தைக் குறித்து, அதிர்ஷ்டவசமாக, நமக்கு இருவிதமான சாதனங்கள் இருக்கின்றன. முதலாவது எண்ணற்ற நிர்வாகக் கையேடுகள்—**தஸ்தூருல் அமல்**கள். **தஸ்தூருல் அமல்**களும் குறைபாடுகள் உள்ளவைதாம். மற்றெல்லாக் கையேடுகளைப் போலவே இவற்றையும் யாரும் பின்பற்றுவது கிடையாது என்று நாம் ஊகிக்கலாம். இருப்பினும், சரியான முறையில் ஆராய்ந்தால் இக்கையேடுகள் பல

தகவல்களைத் தரக்கூடும். அக்பர் அவர்களுடைய வருமானத்தை நிர்ணயிப்பதற்கான நிலப் பிரிவுகளை உங்களுக்கு ஒரு உதாரணமாகக் காட்டுகிறேன். இந்தப் பிரிவு முறை நிலத்தின் வளமையை அடிப்படையாகக் கொண்டிராமல் உற்பத்தி தொடர்ந்து நடைபெறுவதையே அடிப்படையாகக் கொண்டது. போலஜ், பரௌதி, சாச்சர், பஞ்சர் என்ற மாதிரியான பிரிவு முறையையே குறிப்பிடுகிறேன். இதற்கு நேர்மாறாக **அயின் ஏ அக்பரியில்**, நல்லவை, நடுத்தரம், மட்டம் என்று மூன்று பகுதிகளாக நிலம் பிரிக்கப்பட்டிருந்ததாக ஒரு பொதுக் குறிப்பு இருக்கிறது. இதற்கு மேற்பட்டு நல்ல, நடுத்தர, மட்டமானவைகளைப் பற்றி வேறு எதுவும் கூறப்படவில்லை. ஆனால் **போலஜ்** என்றால் என்ன, **சாச்சார்** என்றாலென்ன, **பஞ்சர்** என்பதென்ன, **பரௌதி** என்றாலென்ன என்ற விவரமான வர்ணனைகள் நிறைய இருக்கின்றன. இதை அந்த நூலில் உள்ள மற்ற உத்தரவுகளுடன் இணைத்துப் பார்த்தால்—மேன்மேலும் அதிகப்படியாக நிலங்களை வேளாண்மை செய்யவும், ஒரு குறிப்பிட்ட கிராமம் கைவிடப் பட்டால் என்னென்ன செய்ய வேண்டுமென்றும் கூறும் உத்தரவுகள்—நமக்கு அரசின் அடிப்படைக் கொள்கையைக் குறித்துத் தெளிவான நிலையைக் காண்கிறோம்.

அக்காலத்தில் நிர்வாகத்தை எதிர் நோக்கிய பிரச்சினைகளில் மிகவும் தீவிரமானது, எக்காலத்திலுமே பயிர் செய்யப்படாத நிலங்களையும் வேளாண்மை நிறுத்தப்பட்ட நிலங்களையும் எங்ஙனம் வேளாண்மையின் கீழ் கொண்டு வருவது என்பதே என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகவே இந்த உத்தரவுகள் நிறைவேற்றப்படுவதற்காக வரிச் சலுகைகளும் ஜமீன்தாரி உரிமை மான்யங்கள் போன்றவைகளும் வழங்கப்பட்டன. நிர்வாகக் கையேடுகளும் பல்வேறு மான்யங்களையும் ஸ்தானங்களையும் பற்றி வரையறுத்துக் கூறுகின்றன. தற்பொழுது நமது பல்கலை கழகங்கள் பலவற்

றில் நாம் நடத்தி வரும் ஆராய்ச்சிகளை இக்கையேடுகளைப் பகுத்தாராய்வதன் மூலம் தொடர்ந்து செய்து வந்தால், நில உடைமைப் பிரச்சினைகளைப் பற்றி நிறைய செய்திகள் நமக்குக் கிடைக்கும் என்றவுணர்வு எனக்கேற்படுகிறது.

அசல் வருமானத் தஸ்தாவேஜிகள் மற்றொரு ரகத்தைச் சேர்ந்த நிர்வாகப் பத்திரங்கள். நம்முடைய நல்ல காலமாக இவை பல இடங்களில் நீடித்திருக்கின்றன. இவைகளின் மிகப் பெரியத் தொகுப்புக்கள் பிகானீரிலும் ஹைதராபாதிலும் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். முன்னாள் ஜயப்பூர் ராஜ குடும்பத்தின் 17—வது, 18-வது நூற்றாண்டுகளுக்கான மொத்த தஸ்தாவேஜிகளும் இருக்கின்றன. **வதன் ஜாகீரா**கவோ அல்லது **ஜாகீரா**கவோ அல்லது வேறு ஏதாவது ஒரு முறையிலோ அம்பர் அரசர்கள் வசம் பல **பர்கானா**க்கள் இருந்தது நமக்குத் தெரியும். ஒவ்வொரு **பர்கானா**வைப் பற்றிய விரிவான சுருக்கமும் ஒவ்வொரு கிராமத்தைப் பற்றிய விளக்கங்களுடன் வைக்கப்பட்டிருந்தன. நல்ல காலமாக, இவற்றில் பல எஞ்சியிருக்கின்றன. நான் குறிப்பிடுவது **அர்ஸத்தா**க்களையே. அர்ஸத்தா தஸ்தாவேஜிகளைக் குறித்து பல கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தத் தஸ்தாவேஜிகளில் கண்டுள்ள தகவல்கள் சம்பந்தமாக நானும் கொஞ்சம் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். எடுத்துக் காட்டாக, நமக்கு ஒரு பர்கானா அல்லது கிராமத்தில் வசூலிக்கப்பட்ட வருமானத்தைப் பற்றிய விவரமான தகவல்கள் கிடைத்தால் நாம் செய்யக் கூடிய காரியம்—**கரீஃப்** அறுவடைக்கும் **ரபி** அறுவடைக்கும் இடையே மாறிவரும் விகிதாசாரங்களைக் கண்டு பிடிப்பது. ஒரு சில ஆண்டுக் கால வரம்பில் முற்றிலும் பெரிய நிலப் பரப்பொன்றில் **ரபி** அறுவடையிலிருந்து வசூலிக்கப்பட்டதற்குச் சரியாக **கரீஃப்** அறுவடையிலிருந்து வசூல் செய்யப்பட்ட வருமானம் வளர்ந்து வந்ததா? ஐந்து அல்லது ஆறு அல்லது அதற்கும் மேற்பட்ட **பர்**

சாஞக்களில் இப்போக்கைக் காணலாம். நான் ஆறு பர் கானுக்களைப் பகுத்தாராய்ந்திருக்கிறேன். 1663லிருந்து 1743 வரையில் ரபி பயிர்களின் வருமான விகிதம், கரீஃப் பயிருடன் ஒப்பிட்டால், அதிகரிக்கிறது என்றே தோன்று கிறது. இந்தப் பிரதேசம் கிழக்கு ராஜஸ்தானில் ஜயப்பூருக் கும் ஆக்ரா—டெல்லிக்கும் இடையிலுள்ளது; இப்பிரதேசம் நீர்ப்பாசனத்துக்கு முற்றிலும் மழையை நம்பியிருக்கிறது என்று நாமறிவோம். ஆதலால் பரம்பரையாக கரீஃப் அறு வடையே முக்கியமான அறுவடை. ஆகையால் ரபி அறு வடையின் நிலை அபிவிருத்தி அடைந்து கொண்டிருந்தால், பயிர்த்தொழிலில் உள்ளீடுகள் அதிகமாகச் கையாளப் பட்டன என்பதே பொருள். நமது நாட்டின் இப்பகுதியில் அதிகமான உள்ளீடுகள் இல்லாமல் ரபி விளைச்சல் அதிகரிக் கவே முடியாது.இப்பொழுது புதிய பிரச்சினைகள் எழுகின்றன. இதற்கு முதலீடு எங்கிருந்து வந்து கொண்டிருக்கிறது?

நான் பரிசீலனை செய்ய முயற்சித்த அதே பிரச்சினையின் இன்னொரு பக்கத்தை எடுத்துக் கொள்ளுவோம்—அதாவது தீர்வை முறையையும் மொத்தத் தீர்வைத் தொகையை யும் கண்டு பிடிப்போம். இவ்விரண்டு இனத் தொகைகளை யும் ஒரே அளவையில் கொண்டு வர முயற்சிக்கையில் பெரிய தொரு சிக்கல் தோன்றுகிறது உங்களுக்குக் கிடைக்கும் அளவு கல்லபக்ஷியாகவும் நிலப்பரப்பு ஜப்த் ஆகவுமிருக்கும். இவையிரண்டையும் எப்பொழுதும் ஒரே அளவையில் கொண்டு வர முடியாது. ஏனெனில் சில பயிர்களின் தீர்வை பயிர்களைப் பகிர்ந்து கொள்வதன் அடிப்படையில் செய்யப் பட்டது—இங்கே மொத்த உற்பத்தியின் அளவு கணக்கெடுத் துக் கொள்ளப்பட்டது. சில நிலங்களின் தீர்வை பிகாக் களின் அடிப்படையில் இருந்தது— இங்கே பயிர் செய்யப் பட்ட மொத்த விஸ்தீர்ணம் கணக்கெடுத்துக் கொள்ளப் பட்டது.

இந்தப் பிரச்சினையை நான், காலஞ்சென்ற டி. டி. கோசாம்பி அவர்களிடம் கூறினேன். சிறந்த கணிதநிபுணரான அவர் தமது மனதிற்கு மிகவும் சுலபமானதும் ஆனால் மிக மிகச் கடினமானதுமான வழிமுறையொன்றை எடுத்துரைத்தார். எல்லாப் புள்ளி விவரங்களையும் அவரிடம் கொடுத்து, அவரே அதைச்செய்து தர வேண்டும் என்பது எங்கள் முதல் எண்ணம். ஆனால் துர்ப்பாக்கிய வசமாக அவர் இறந்து விட்டார். இவ்விரு வகைச் சான்றுகளையும் ஒரே அளவையின் கீழ் கொண்டு வர முடியும் என்று கூறிய புள்ளி இயல் நிபுணர் அவர் ஒருவர்தாம். அவருடைய மறைவுக்குப் பிறகு எனக்குப் புரிந்த வரையில் ஏதோ சிறிதளவு அவருடைய யோசனையின் அடிப்படையில் செயற்பட்டேன். இரு அறுவடைகளிலும் ஒவ்வொரு பயிரின் கீழும் எவ்வளவு நிலப்பரப்பு இருந்தது என்பதையும், ஒவ்வொரு பிகாவுக்கும் விளைச்சல் எந்த அளவில் இருந்தது என்பதையும் கண்டு பிடிக்க முடிந்தது. இதிலிருந்து கிடைத்த முடிவு, இவ்விரண்டு அறுவடைகளிலிருந்து வசூலிக்கப்பட்ட வருமானத் தொகையை ஒப்பிட்டுப் பார்த்ததிலிருந்து ஏற்பட்ட அபிப்பிராயத்தை ஏறக்குறைய உறுதிப் படுத்தியது.

மேலும், பயிர் முறைகள் மாறி இருந்தால் கரீஃப், ரபி அறுவடைகளுடன் இம்மாற்றங்களையும் பயிர் விளைச்சலில் ஏற்பட்ட மாறுதல்களையும் இணைத்து நாம் ஆராயத் துவங்கலாம்— (அ) வேளாண்மையில் ஏதாவது விஸ்தரிப்பு ஏற்பட்டிருக்கிறதா அல்லது (ஆ) நிலத்தின் விளைச்சல் அல்லது உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறதா? இந்த வருமானப் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி நாம் எதிர்கொள்ளக் கூடிய இன்னொரு பிரச்சினை, விலைவாசிகளின் நிலையில் மாறுதல்களைக் கண்டறிவதே.

விலைவாசிகளின் நிலையில் மாறுதல்கள் மிகவும் சுவையான அம்சத்தை அளிக்கின்றன. ராஜஸ்தானத்தின் ஒரு

பகுதியில் ஒரு பொருளின் விலை பெருமளவு சரிந்ததென்றால் உடனே ராஜஸ்தானத்தின் மற்றொரு பகுதியில் அந்தப் பொருளின் விலைச்சரிவில் அது பிரதிபலிக்கிறது. விலைவாசிகளின் இந்த மாற்றம் ஐரோப்பியக் கம்பெனி தஸ்தாவேஜிகளில் காணப்படும் விலைவாசி நிலை மாறுதல்களோடு ஒத்திருந்தால் கிராமப் பொருளாதாரத் தன்னிறைவு கிடையாது என்பது தெள்ளத் தெளிவாகிறது. தன்னிறைவு பெற்ற கிராம ஏற்பாடு ஒன்றிருந்தால் கிராம வாசிக்கு தேசத்தின் வெவ்வேறு பாகங்களின் உற்பத்திப் பொருட்கள் கிடைக்கும்படி செய்து கொண்டிருந்ததேன்? வங்காளத்திலிருந்து இதைப் பற்றிய சில புள்ளி விவரங்கள் எஞ்சி இருக்கின்றன. ராஜஸ்தானின் **அர்ஸத்தாக்**களில் காணப்படும் தகவல்களுடன் இவற்றையும் சேர்த்துப் பார்த்தால் கிழக்கு வங்காளத்தில் உள்ள ஏற்பாடு கிழக்கு ராஜஸ்தானிலிருந்த முறையினின்றும் அதிகம் வேறுபடவில்லை என்பதைக் காணலாம். வெவ்வேறு விதமான நாணயங்கள் வாயிலாக விலைவாசியின் ஏற்ற இறக்கங்களை நேர்த்தியாக அறிவித்த **நிர்க பஜாரை**யும் காண்கிறோம்.

பீஹாரில் காணப்படுவதும், உத்தரப் பிரதேசத்திலும் தேசத்தின் மற்றப் பாகங்களிலும் சாதாரணமாகவே கிடைக்கும் 'களப்பேடு' என்ற பரம்பரைப் பத்திரம் மாத்திரம் இந்தத் தஸ்தாவேஜிகளில் குறிப்பாகக் காணப்படவில்லை. இது வேளாண்மையின் கீழுள்ள நிலங்களைப் பற்றிய எல்லா அவசியமான தகவல்களையும் தருகிறது. உழுது பயிரிடுபவர் யார், சொந்தக்காரர் யார், பயிரிடப்படுவது என்ன என்று அது தெரிவிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக இந்தக் குறிப்பிட்ட பத்திரம் நாட்டின் வெவ்வேறு பாகங்களில் அதிக அளவில் எஞ்சியிருக்கவில்லை. அவை இருந்திருந்தால் நாம் ஆலோசனை செய்து கொண்டிருக்கும் பல பிரச்சினைகள் முடிவாகத் தீர்ந்திருக்கும்.

பிரிட்டிஷ் நிர்வாகத்தினரால் 18—ம் நூற்றுண்டில் தயாரிக்கப்பட்ட வருமானப் பத்திரங்களில் இதுவரை போது மான கவனம் செலுத்தப்படவில்லை. முதன் முதலாக பிரிட்டி ஷார் வங்காளத்திற்கு வந்து திவானி உரிமை பெற்றபோது நிலமுறைகளைப் பற்றித் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரி தெரிவிக்க வேண்டியிருந்தது என்பதும் உங்களுக்குத் தெரி யும். நிலத்தின் சொந்தக்காரர் யார், பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஜமீன்தார்களின் உரிமைகள் என்ன என்ற கேள்வி களுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ், பிலிப் ஃப்ரான்ஸிஸ், ஜேம்ஸ் க்ராண்ட், ஸர் ஜான் ஷோர், பௌட்டன் ரௌஸ் போன்ற அறிவாற்றல் மிக்க பிரிட்டிஷ் நிர்வாகிகளிடையே கூட இதைப் பற்றிய கடுமையான கருத்து வேறுபாடு நிலவியது. அவர் க்ள் ஒவ்வொருவரும் தங்கள் சொந்தக் கருத்தை வெளியிட்ட னர். இவர்கள் நிலைமையை உள்ளபடி கவனித்திருக்கிறுர்கள் என்பதில் ஐயமில்லை. ரஞ்சித் குஹா, அவர்கள் தனது 'ரூல் ஆஃப் ப்ராப்பர்ட்டி இன் பெங்கால்' (Rule of Property in Bengal) என்ற புத்தகத்தில் சரியாகவே சுட்டிக் காட்டு வதுபோல், இவர்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக் களால் பாதிக்கப்பட்டிருந்தாலும், இந்திய நிலைமையை அவர் கள் தங்கள் சொந்த அனுபவங்களின் மூலம் புரிந்துகொள்ள முயன்ருர்கள் என்று வைத்துக் கொண்டாலும் இக்கேள்வி எழுகிறது: இந்தியர்கள் கொடுக்கும் தகவல்களும் இவைக ளுக்கு ஈடாக முரண்பாடாகவே இரும்பதேன்? இக்காரணத் திஞலேயே, நான் இந்தியர்களால் தரப்பட்ட தகவல்களின் தன்மையை ஆராய ஆரம்பித்தேன்.

நல்ல காலமாக இப்பத்திரங்களின் பெரும் பகுதி பிரிட் டனிலும், ஐரோப்பாவிலும் உள்ள பல நூலகங்களில் நீடித் திருக்கின்றன; அவற்றில் பெரும்பான்மையானவை பாரசீக மொழியில் இந்தியா அலுவலகத்தில் பாதுகாக்சப்பட்டிருக்

கின்றன. இத்தகவல்களை எழுதிய இந்தியர்களிடையே இருந்த கடுமையான கருத்து வேறுபாட்டைப் பற்றி என்னுடைய சொந்த ஊகங்களைத் துணிந்து கூறியிருக்கிறேன்: ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நில உரிமைகளின் ஒரு கோணத்தை விவரித்திருப்பது சமுதாய மாற்றத்தின் அறிகுறியே என்று கருதுகிறேன்; ஆகவேதான் நாம் காணும் இக்குழப்பம். எப்படியிருப்பினும் அதைப் பற்றி நமக்கு இப்பொழுது அக்கறையில்லை, முதன் முறையாக இப்பத்திரங்களில் உடைமையாளர்களின் அடையாளம் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டு விடைகளும் தரப்பட்டிருக்கின்றன. வேறு பல பிரச்சினைகளும் இருந்தன—சொத்துரிமை பிறந்தது எங்ஙனம்? இச்சொத்துரிமைகளின் விவரங்கள் யாவை? மரபுரிமை-வாரிசு-எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டது? யாராவது நிலத்தை கைவிட்டுச் சென்றுவிட்டால் என்ன நடந்தது. வசூல் உரிமையை வேறு எவராவது பெற்றுக் கொண்டால் நிகழ்ந்தது யாது? மற்றும் இதைப் போன்ற பிரச்சினைகள் உள்ளன.

இந்தக் கேள்விகள் குறிப்பாக நான்கு சந்தர்ப்பங்களில் கேட்கப்பட்டன—1772-ல், 1775-ல், 1787-ல் மற்றும் கடைசியாக 1788-ல். ஒரு வினாப் பட்டியில் 14 வினாக்களும் மற்றொன்றில் 52 மிக விவரமான வினாக்களும் இருந்தன; பிறகு இன்னுமிரண்டில் நான்கு கேள்விகள் வீதம் இருந்தன, இந்தக் கேள்விகளும் பதில்களும் எஞ்சியிருப்பது, நாம் தனிநபர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள இன்றியமையாததாக இருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மற்றும் முகலாயப் பேரரசு முழுவதற்கும் வருமான நிர்வாகத்தைப் பற்றிய விவரமான செய்திகளடங்கிய 52-க்கும் மேற்பட்ட தொகுதிகள் எஞ்சியிருக்கின்றன. எண்ணிக்கைகளும் கிடைக்கின்றன. ஜாகீர் வைத்திருப்பவர்களில் நிகழும் மாற்றங்களைத் தரும் ஒரு தொகுதியும் உள்ளது. இந்தச் செய்திகளை அளவு சார்ந்த தணிக்கைக்கு உட்படுத்தலாம்.

உதாரணம், அக்பர் அவர்களுக்குப் பிறகு முகலாயப் பேரரசில் **ஜாகீர்கள்** அடிக்கடி மாற்றப்பட்டன என்ற கூற்று. இங்கு **ஜாகீர்கள் ஸுபாக்**களாகவும் **ஸர்க்கார்**களாகவும் அமைக்கப்பட்டிருப்பதால் இந்தச் செய்தியை சரி பார்க்கக் கூடும். நாம் இம்மாற்றங்களைத் துப்பறிந்து பின் வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும் இயலும். இம்மாற்றங்கள் எவ்வளவு சீக்கிரம் நிகழ்ந்தன? இந்தப் போக்கு எல்லாவிடங்களிலும் காணப்படுகிறதா? அல்லது ஏதோ சில இடங்களில் மட்டும் தென்படுகிறதா? வெளி மாநிலங்களுக்கும் மத்திய மாநிலங்களுக்கும் இடையே ஏதாவது வித்தியாசங்கள் இருந்தனவா?

மீண்டும், வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகியவைகளைப் பொறுத்தமட்டில் ஜமீன்தார்கள் **ஜோத்தார்கள்** பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. இவற்றை இன்னமும் பகுத்தாராயும் முறைக்குட்படுத்தலாம். வேறு சில பத்திரங்களும் இருக்கின்றன. ஏதோ சில எடுத்துக்காட்டுகளைத் தவிர, நான் இப்பத்திரங்களைப் பாரசீக மொழியில் கண்டதில்லை. ஆயினும் இப்பத்திரங்களின் மொழி பெயர்ப்பு வங்காளத்தின் வருமான ஆலோசனைகளில் காணக் கிடைக்கின்றன. இவைகளே **பட்டாக்கள்** எனப்படுபவை (கொடுக்கும்படி கேட்கப்பட்ட வருமானத் தீர்வை). **பட்டாக்களில்** எல்லாத் தினுசுகளும் உண்டு-**பட்ட முசால்கா** (கொடுக்க ஏற்றுக் கொள்ளல்) மற்றும் **கபூலியத்** (கேட்கப்பட்ட வருமானத்தை ஒப்புக்கொள்ளுதலை பதிவு செய்த பத்திரம்) இவைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. **பட்டாக்களின்** முற்றிலும் நல்ல மாதிரிகளை—1765-லிருந்து 1793 வரை வங்காளத்தைப் பொறுத்தமட்டில்—கிழக்கிந்தியக் கம்பெனித் தஸ்தாவேஜிகளில் காணலாம். இதைப் போன்றச் சாதனங்களை முற்றும் நம்பியிருப்பதைப் பற்றி எனக்குச் சிறிது சந்தேகமே. ஏனெனில் இந்த மாதிரிப் **பட்டாக்கள்** அவற்றுக்கே உரிய சிறப்புத் தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்பது நிச்சயமில்லை.

அவைகள் நல்ல எடுத்துக்காட்டுகளாக இல்லாமலும் போக லாம். ஆனால், நாம் இந்த எடுத்துக்காட்டுகளை அசல் பாரசீக மொழியில் இருக்கும் மாதிரிகளோடு இணைத்து உபயோகித் தால், ஒருவேளை, ஏதாவது பொதுப்படையான அபிப்பிராயங் கள் தெரிவிப்பது செல்லுபடியாகும். அநேகமாக, நிலவுடை மைச் சரித்திரத்தைப் பற்றி நமக்குக் கிடைக்கும் ஆதாரச் செய்திகளின் தன்மை இப்படித்தானிருக்கிறது.

நாம் அடிக்கடி உபயோகிக்கும் மிகவும் முக்கியமான ஆதாரங்களைப் பற்றி, அதாவது நான் மேற்கோள்கள் காட் டிய, வர்த்தகக் கம்பெனிகள் விட்டுச் சென்ற தஸ்தாவேஜி களைப் பற்றி வேண்டுமென்றே குறிப்பிடவில்லை. வர்த்தகக் கம்பெனிகளின் தஸ்தாவேஜிகள் மிகவும் இன்றியமையாத வையாயினும் நாம் குறிக்கொண்டுள்ள கருத்திற்கு உடனடி யாக முக்கியமன்று. தகவல்களின் சுரங்கமான இன்னொன் றையும் நான் குறிப்பிடவில்லை, ஏனெனில் நான் இவற்றைப் படித்தறிந்தது நமது தேவைக்குச் சிறிதளவும் போதாது. என் மனத்தில் இருப்பவை போர்த்துக்கீசியத் தஸ்தாவேஜிகளே. மூன்றாண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கீசிய மொழியை கொஞ் சம் பயின்றேன். நான் கற்றது, அம்மொழியைப் பயன்படுத் தப் பற்றாவிட்டாலும் இந்தத் தஸ்தாவேஜிகளின் தன்மையை அறிந்துகொள்ள உதவி செய்வதற்குப் போதுமானது. அக் காலத்தியப் பொருளாதார, சரித்திரப் பிரச்சினைகள் பலவற் றை இப்போர்த்துக்கீசியத் தஸ்தாவேஜிகளே விளக்க வேண்டும். இந்திய அலுவலகத்தில் அகப்பட்ட சில போர்த்துக்கீசியப் பத்திரங்களின் பிரதிகளை இங்கிலாந்தி லுள்ள என் நண்பர்கள் சிலர் அன்பு கூர்ந்து மொழி பெயர்த் துக் கொடுத்தனர். இம்மொழி பெயர்ப்புக்களின் உதவியா லும், இந்தியா அலுவலகத்தில் மொழி பெயர்க்கப்பட்ட சில பத்திரங்களினுடைய உதவி கொண்டும் போர்த்துக்கீசியத் தஸ்தாவேஜிகளில் கண்டுள்ள தகவல்களைப் பற்றி எனக்குப்

பொதுவானதொரு அபிப்பிராயம் உருவாகியுள்ளது. ஆயினும் கோவாவினுடைய தஸ்தாவேஜிகளை நான் பயன்படுத்தவில்லை என்று வருத்தத்துடன் தெரிவிக்கிறேன். இடைக் கால வரலாறும் போர்த்துக்கீசிய மொழியும் அறிந்த எவரேனும் கோவாவில் கிடைக்கும் தஸ்தாவேஜிகளைப் பார்வையிடும் முயற்சியை மேற்கொண்டு நில உடைமை உறவுகளைப் பற்றி மேலும் என்ன விளக்கங்கள் தரக்கூடும் என்று ஆராய்வார்கள் என நம்புகிறேன்.

2 நிலஉடைமைப் பொருளாட்சியின் அமைப்பு

முதலில் நில உடைமை விவகாரங்களில் மிக முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றையும், ஆதாரக் குறிப்புகளின் தன்மையினுல் நில உடைமைச் சரித்திரத்தில் எழும் வினுக்களுக்கு விடையளிப்பதில் உள்ள சிரமத்தையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர எத்தனித்தேன். மேலும் நில உடைமை விவரங்களை ஆராயும் பொழுது பயன் தரக்கூடிய முறையில் கையாள வேண்டிய சில வழிகளையும் குறிப்பிட்டேன்.

இப்பொழுது, தற்காலத்தில் அநேகமாக ஒப்புக் கொள்ளப்பட்ட நிலைகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறிவிட்டு, நிகழ்ந்து கொண்டிருக்கும் மாறுதல்களைக் குறித்து சில ஊகங்களைத் தெரிவிக்கத் துணிகிறேன். இங்கு தங்களுடைய கவனத்திற்காக நான் தாழ்மையுடன் தெரிவிக்கும் கருத்துக்கள் தற்காலிகமான அனுமானங்களாகத்தான் இருக்க முடியும் என்பது நான் முன்னமும் கூறியவற்றிலிருந்து தெளிவாகும். நிச்சயமாக எதையும் சொல்வதற்கு முன்பு நாம் இன்னும் நிறைய ஆராய்ச்சிகள் செய்யவேண்டியது பாக்கி இருக்கிறது. தவிர இன்னொரு முக்கியமான விஷயத்தையும் யோசிக்க வேண்டும். நம் நாடு மிகுதியான பரப்புடையது;

பூகோள நிலையும் பலதரப்பட்டது. ஆகவே இதன் பொருளாதாரம் எந்த ஒரு சமயத்திலும் ஒரே மாதிரியாக இருப்பது அசாத்தியம். ஆயினும் முகலாய சாம்ராஜ்யம் நிர்மாணிக்கப் பட்டதன் பலனாக ஸ்தாபனங்களில் சிறிது சீரான தன்மை கொண்டுவரப்பட்டது. ஆகவே நாடு முழுவதையும் பற்றிய பொதுபடைக் கருத்துக்களைத் தெரிவிக்க இயலுமென்றாலும் பல சமயங்களில் பொதுப்படைக் கருத்துக்கள் தேவைக்கு மிகவும் அதிகமாகவே சிக்கல்கள் நீக்கப்பட்டவைகளாக இருக்கும்

பரவலாகக் கூறுகையில் இடைக்கால இந்தியாவில் விவசாயப் பொருளாதாரத்தின் பெரும் பகுதி இரு வகையாக இருந்தது—சுயேச்சை உழவர் பொருளாட்சி, குத்தகை பயிரிடுபவர் பொருளாட்சி கிராம அமைப்பு முறையில் மிகவும் முக்கியமானது சுயேச்சை உழவர்ப் பொருளாட்சிதான் என்பது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று நான் கருதுகிறேன். சுயேட்சை உழவர்ப் பொருளாட்சியே கிராம அமைப்பின் முதன்மையான முறை என்று எந்த விதமானச் சான்றுகளின் அடிப்படையில் கூறலாம் என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

வேளாண்மை விஸ்தரிப்பை உறுதிப் படுத்துவதே முகலாய அரசின் இடைவிடாத முயற்சியாக இருந்தது; தேவையான வசதிகள் இல்லாத சாதாரண விவசாயத் தொழிலாளியால் வேளாண்மை விஸ்தரிப்பைச் செயல் படுத்த முடியாது. தற்கால பீஹார் மாநிலம் சம்பந்தப்பட்ட 18-ம் நூற்றாண்டுப் பத்திரம் ஒன்றில் இப்பிரதேசத்துக்கே உரியதும், இருப்பினும் ஒரு பொதுவான வகையையும் குறிக்கும் ஒரு சொல்லைப் பார்த்திருக்கிறோம். இங்கு கையாளப்படும் சொல் **ஹல்மீர்**—அதாவது தன் வசம் நான்கு அல்லது அதிகமான ஏர்கள் வைத்திருப்பவர்; சாதாரணமாக வேளாண்மையின் விஸ்

தரிப்பு நான்கு அல்லது அதிக ஏர்கள் உடையவர்களால்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அப்பொழுது வழக்கிலிருந்த ஹிந்து, முஸ்லீம் சட்டப் பிரகாரம் புதிய நிலங்களைப் பயிரிடு பவரே அதற்குச் சொந்தக்காரர் என்று அங்கீகரிக்கப்பட உரிமை உடையவர்சள். இவரை முகலாய சொற்றொடரில் ஜமீன்தார் என்றும் அந்த குறிப்பிட்ட நிலப்பகுதிக்கு **மாலிக்** (நிலத்தின் உரிமையாளர்) என்றும் இனம் கண்டு கொள்ள லாம். 16, 17, 18-ம் நூற்றுண்டுகளில் புதிய பிரதேசங்க ளைச் சாகுபடி செய்தவர்கள் **மாலிக்** அல்லது நிலத்தின் சொந்தக்காரர்2 என்று அங்கீகரிக்கப்பட்டதற்கு உறுதி யானச் சான்றுகள் இருக்கின்றன. முன்னர் நான் குறிப்பிட்ட இந்தியா ஆபீஸ் பத்திரங்கள் **ஜோத்தார்** பற்றிய குறிப்புகள் அடிக்கடி வருகின்றன. எந்த நிலத்திற்கும் கீழ்க்கண்ட கேள்வி கள் கேட்கப்பட்டன. அதனுடைய உரிமையாளர் யார்? அல் லது யாருடைய **ஜோத்தாரியில்** அது இருக்கிறது? யாருடைய **தாலுக்தாரியில்** உள்ளது? மற்றும் எவருடைய **ஜமீன்தாரியில்** அது இருக்கிறது?

ஜோத்தார் என்பதற்கு ஒரே ஒரு பொருள்தான் இருக்க முடியும்; அதாவது சுயேச்சையான உழவர் குலத்தைச் சார்ந்த வேளாண்மையாளர். அவர் தாமே பயிர்த் தொழில் செய்தாலும் செய்யாவிட்டாலும் பயிர்த் தொழில் நடப்ப

2 டிசம்பர் 1972-ல் நடந்த இந்திய வரலாற்று மகா சபைக் கூட்டத்தில் பேராசிரியர் ஸதீஷ் சந்திரா, தில் பக் ஸிங் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை யில்—''ஸ்ட்ராடிபிஃபிகேஷன் அண்ட் ஸ்ட்ரக்சர் இன் ரூரல் ஸொஸைடி இன் ராஜஸ்தான்'' (Stratification and Structure in Rural Society in Rajasthan)-**பஞ்ஜார்** நிலங்களைச் சாகுபடி செய்ய கிராமத்துக்கு வெளியிலி ருந்து தங்கள் ஏர்களுடன் உழவர்கள் வருவதற்குச் சான்று காட்டப்பட்டிருக்கிறது. இத்தகைய உழவர் கள்-**பாஹிர்** என்றழைக்கப்பட்டவர்கள்—**மாலிகி** உரி மைகளைப் பெற்றிருந்தனர்.

தற்கு உத்தரவாதமானவர் இடைக்காலப் பத்திரங்களில் **கிருஷ்கா**, மற்றும் **கிஸான்** என்ற வார்த்தைகள் இதே அர்த்தத்தில் உபயோகப்படுவதையும் காண்கிறோம். **கிஸான்** என்ற சொல் 18-ம் நூற்றுண்டில் பயன் படுத்தப் பட்டது; ஆனால் **கிருஷகா** இதற்கும் முன்பே காணப்படுகிறது. முகலாயத் தஸ்தாவேஜிகளில் மிகவும் சாதாரணமாக உபயோகப்படும் **ரயத்** எனும் சொல் நான் எடுத்துக்காட்ட முயற்சித்தாற்போல், ஜமீன்தாரைக் குறித்தே அதிகமாகப் பயன்பட்டது. ஆனால் **ரயத்** எனும் சொல் பல்வேறு வரலாற்றுத் தொடர்களில் கையாளப்படும் மாதிரியிலிருந்து இவர்கள் பெரிய குடியானவை உரிமையாளர்கள் என்று தோன்றுகிறது. **ரயத்** என்னும் சொல்லிலிருந்து மாறுபட்டது என்று கருதப்படும் **முஜாரா** எனும் சொல்லும் வழக்கிலிருக்கிறது. **முஜாரர்** குடியானவ உரிமையாளர்களை மட்டுமன்றி குத்தகைக்குப் பயிரிடுபவரையும் குறிக்கும்; **ரியாயா முஜாரா** என்ற இரு தனிச் சொற்களைப் பயன்படுத்துவதன் காரணம் இதுதான் என்று நான் எண்ணுகிறேன், இருப்பினும் **ரியாயா** என்பதன் சரியான அர்த்தம் பிரஜை; **முஜாரா**வின் பொருள் பயிர்த் தொழில் மூலம் வாழ்பவர்.

பிரிட்டிஷார் இங்கு வந்தபொழுது இச்சொற்களின் பொருள் தெரியாமல் திகைத்தனர் ஆகவே அறிவாற்றல் மிக்கவர்களை **முஜாரா** எனும் வார்த்தையை விளக்கும்படி கேட்டனர். **முஜாரா** எனும் சொல்லின் சில மிகச் சுவையான விளக்கங்கள் நம்மிடம் இருக்கின்றன. இந்த விளக்கங்களில் உள்ள குழப்பங்களையும் மீறி **முஜாரா** எனும் சொல் எப்பொழுதும் உழவுத் தொழிலை தாமே மேற்கொள்ளும் நபரைத்தான் குறிக்கிறது. என்பது மிகத் தெளிவாகவே இருக்கிறது. தவிர, **முஜாரா** கிஸ்தி கட்டும் விவசாயி என்ற பொருளிலும் வழங்கப்பட்டாலும் முகலாயப் பத்திரங்களில் **முஜாரா** உபயோகிக்கப்படும் முறையிலிருந்து அது கிஸ்தி

கட்டும் விவசாயியைக் குறிக்கவில்லை என்பது புரிகிறது. **ரயத்** என்ற சொல்லே குத்தகைதாரர்கள் மூலம் வேளாண்மையை நடத்தும் ஜமீன்தாருக்கும் குடியானவ விவசாயிக்கும் பயன் படும்.

ராஜஸ்தானியப் பத்திரங்களில் **ரியாயா** கிட்டத்தட்ட சுயேச்சையான குடியானவ விவசாயி என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது.

பேராசிரியர் இர்ஃபன் ஹபீப் **குத்காஷ்ட்** என்ற சொல்லை விளக்கமாக விவாதித்திருக்கிறார்; இது மூர்லண்ட் அவர் களாலும் விவாதிக்கப்பட்டுள்ளது. முற்காலத்திய பிரிட்டிஷ் நிர்வாகிகளினால் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களினால் நாம் குழப்பமடையக் கூடாது; 'அமினி கமிஷனி'ன் அறிக்கையின் முன்னுரையில் **குத்காஷ்ட்டி**ற்கு, வழக்கத்திற்கு மாறான விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்தின்படியும் வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் பௌட்டன் ரௌஸ் ஆகியவர் களின் குறிப்பின்படியும் **குத்காஷ்ட்** என்பது உழவர் தாம் வசிக்கும் கிராமத்திலேயே பயிரிடும் நிலம்; **பாஹி காஷ்ட்** என்பதிலிருந்து இது வேறுபடுகிறது-அதாவது தனக் குச் சொந்தமில்லாத கிராமத்தில் சாகுபடி செய்யும் நிலம். என்னுடைய அபிப்பிராயப்படி இது **குத்காஷ்ட்** என்பதன் தெளிவற்ற விளக்கமே.

தற்காலத்திலும் **குத்காஷ்ட்** நன்றாகவே புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. 1947-க்கு முன்பு வரை கூட **குத் காஷ்ட்** என்றால் பயிர்த் தொழிலை நடத்துபவர் என்றே கருதப்பட்டது—ஜஹாங்கீரால் எந்த அர்த்தத்தில் நமது **அமீல்கள் ரியாயா**வின் நிலங்களை தங்களுடைய **குத் காஷ்ட்** ஆக செய்து கொள்ளக் கூடாது என்று கட்டளை யிட்டனரோ அதே பொருள்தான் இதுவும்

ஆகையால் முந்தைய பிரிட்டிஷ் விளக்கப் பிரகாரம் குத்காஷ்ட் நிலம் என்பது எங்கு பெரும்பான்மையான மக்கள் நிலங்களைப் பயிரிட்டும் அல்லது வாழ்ந்தும் வந்தனரோ அந்த நிலத்தைக் குறிக்கும். உண்மையில் இது ஒரு விசேஷமான சொத்துரிமை வகையைச் சுட்டிக் காட்டுவதாகும்.

'அமினி கமிஷன்' அறிக்கையின் தேதியிலிருந்து, அதற்குப் பிறகே கிஸ்தி கட்டும் விவசாயிகளுக்கு 'ஜமீன்தார்' என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டது என்பது தெரிகிறது. ஜமீன்தார் என்ற வார்த்தையை எந்த அர்த்தத்தில் உபயோகிக்க எண்ணப்பட்டதோ அந்த அர்த்தத்தில் முந்தைய காலத்தில் அச்சொல்லை உபயோகிக்க முடியவில்லை என்பது மிகவும் தெளிவு. மதாத்-இ-மாஷ் பத்திரங்கள் எழுதப்பட்ட முறையிலிருந்து இந்த மான்யங்கள் பலவற்றில் வழங்கப்பட்ட நிலம் ஜமீன்-ஏ-உஃப்தாதா காபில்-இ-ஜிராத் என்று கூறப்பட்டிருந்ததைக் கவனிக்கலாம்-அதாவது பயிரிடக் கூடியதும் கிஸ்திப் பட்டியலில் சேராததுமான பயிர் செய்யப்படாத நிலம். எவருக்கு மதாத்-இ-மாஷ் அளிக்கப்பட்டதோ அவர் மத சம்பந்தப்பட்டவராகத்தான் இருப்பார்-என்பது வெளிப்படை; அவர் ஹிந்துவாகவோ அல்லது முஸ்லிமாகவோ இருக்கலாம். டாக்டர் தத்தா அவர்களால் பிரசுரிக்கப்பட்ட முகலாய ஃபர்மன்களில் முஸ்லீம் அல்லாதவர்களுக்கும், பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கும் தானமாகக்கொடுக்கப்பட்ட அநேக மதாத்-இ-மாஷ் மான்யங்கள் காணப்படுகின்றன; சில சமயங்களில் ஓய்வு உபகாரச் சம்பளமாகவும் இது கொடுக்கப்படலாம். இதுபோன்ற இரண்டு மதாத்-ர-மாஷ் மான்யங்களின் நகலை குதாபக்ஷ் நூலகத்தில் பார்த்திருக்கிறேன்; இவை சேவை செய்து கொண்டிருந்தவர்களுக்கு அளிக்ககப்பட்டவை. ஒரு நகல் இருந்த

தொகுப்பை என்ஞல் அடையாளம் கண்டுகொள்ள இயல வில்லை. இன்னொரு மிகப் பிரபலமான **இன்ஷா-ஏ-ஹர்கரன்** தொகுப்பில் இருக்கிறது.

ஒவ்வொரு அரசின் பட்டமேற்பின் பொழுதும் **மதாத்-ஏ-மாஷ்** உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தாலும் வம்ச பரம்பரை உரிமையில் சாதாரணமாக குறுக்கீடு இருந்ததில்லை. 18ம் நூற்ருண்டில் **மதாத்-ஏ-மாஷ்** விற்பனைப் பத்திரங்களிருந்து தெரிவதுபோல், காலாவட்டத்தில் **மதாத்-ஏ-மாஷ்** மான்யங்களும் ஜமீன்தாரியின் சிறப்பியல்புகளைப் பெற்று விட்டன. பிரிட்டிஷ் நிர்வாகிகள் எடுத்துக் காட்டுவதுபோல் இந்த **மதாத்-ஏ-மாஷ்** மான்யதார்களில் அல்லது கிஸ்தி இல்லாத மான்யதார்களில் அநேகர் சொத்துரிமையை அல்லது கிட்டத்தட்ட சொத்துரிமையைப் பெற்றனர். வரி இல்லாத மான்யங்களில் இதுவே முதன்யமயான முறையாக இருந்தால்தான் இது சாத்தியம். நான் கூற விரும்புவது இதுவே-இருநூறு அல்லது முந்நூறு பிகாக்கள் கொண்ட நிலத்திற்குச் சொந்தக்காரராகவும் இருந்து தாமே பயிரிடுபவர்கள் அநேகர் இருந்தாலொழிய இது போன்ற வரி இல்லாத மான்யங்கள் அளிப்பது வழக்கமாக இருந்திருக்காது. இது போன்ற முறையே நாடு முழுவதும் குஜராத்திலிருந்து வங்காளம் வரை காஷ்மீரிலிருந்து தக்காணம் வரை பரவி இருந்தது. ராஜஸ்தானின் **அர்ஸத்தாக்களில்** சலுகை பெற்ற நிலச்சுவான்தார்களின் பட்டியலையும் பார்த்தீர்களாஞல் அங்கும் மறுபடி இதைப் போன்ற நிலையே புலஞகும் 50-100-200 பிகாக்கள் கொண்ட நிலத்தை பெற்றிருப்பவர்கள்; ஒன்று அவர்கள் கிஸ்தி கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டிருந்தனர், அல்லது குறைந்த வரியே கொடுக்கவேண்டியிருந்தது.

நான் கூற முயற்சிப்பதெல்லாம் அநேக நபர்கள் 50-200-300 பிகாக்கள் நிலம் உடையவர்களாகவும் இருந்து

கொண்டு தாமே வேளாண்மையும் செய்து கொண்டிருந்த னர் என்பதுதான். ஆனால் அதே சமயத்தில் அவர்கள் பயிர்த் தொழிலை வேறு வழிகளிலும் நடத்தி வந்தனர். 18ம் நூற் றூண்டைச் சேர்ந்த கதௌனி என்ற அசல் களப்பேட்டின் சில பத்திரங்களே எஞ்சியிருந்தாலும் அவை கொடுக்கும் உதாரணங்கள் சிறப்பானவையாக இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. களப்பேட்டில் பத்து பெயர்களுக்கு-உரி மையாளர்கள் பத்து பெயர்-மேல் கொண்ட எந்த ஒரு கிரா மத்தினுடைய கதௌனியையும் நான் பார்க்கவில்லை. ஆகவே, பரவலாகக் கூறுகையில், இவர்கள் யார் என்று சொல்ல முடியும்: அவர்கள் பெரிய ஜமீன்தார்களாக இருக்க முடியாது. ஆனால் அநேகமாக சுயேச்சை உழவர்களாக இருப்பார்கள். இடங்களின் பெயர்களும் இம்முறையைப் பற்றி சிறிது விளக்கம் தருகின்றன. இவற்றை கவனமாக ஆராய்வது பயன்தரக்கூடியது.

பயிர்த்தொழிலின் அமைப்பு ஏறத்தாழ பின்வருமாறு இருந் தது: இவர்களில் சிலர் தங்கள் கூட்டாளிகளினுடைய முக்கிய மாக பய்யாசார முறையில்—உதவியினால் வேளாண்மையை நடத்தும், தாமே பயிர் செய்து வந்த உழவர்கள், அயின் —ஏ—அக்பரியின் தொடக்கத்திலிருந்தே இதைப் பற்றிய மிகுதியானச் சான்றுகள் இருக்கின்றன. ஒரே கூட்டுக் குடும் பத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள், முகலாயர் காலப் பிற் பகுதியில் கித்மதி ப்ரஜா என்றழைக்கப்பட்டவர்கள் சேவை யைப் பயன் படுத்திக் கொண்டனர். கித்மதி ப்ரஜா எப்பொ ழுதுமே, தற்காலத்தில் நாம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றழைப்பவர்களையேக் கொண்டது. இவர்கள் தாங்களே நிலத்தைச் சொந்தத்தில் வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால் இவர்கள் பலவிதமான தொழிற் தொண்டு புரிய வேண்டுமென்று எதிர்ப்பாக்கர்ப்பட்டது. இதற்குப் பிரதியாக இவர்களுக்கு கிராம எல்லைப் புறத்தில் நிலத் துண்டுகள் வழங்

கப்பட்டன. அல்லது விளைச்சலில் ஒரு பகுதி வழக்கமான சேவைகள் புரிந்ததற்காகக் கொடுக்கப்பட்டது. ஆகையால் இவ்வமைப்பில் ஜாதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பங் கேற்றிருந்தது என்பது நன்ருகத் தெரிகிறது. விவசாய அமைப் பின் அடி மட்டத்தில் ஜாதியின் பங்கைப் பற்றிய போதுமான அளவு ஆராய்ச்சி நம்மால் செய்யப்படவில்லை. உயர்குல மக் கள் உழுவதைக் குறித்து இருந்த சமூகக் கட்டுகளினுல் உழுவ தற்கும் மற்றும் பிற விவசாய வேலைகளுக்கும் பெரியதொரு விவசாயத் தொழிலாளர் குழுத் தேவையாக இருந்தது. பயிர்த் தொழில் முறையின் மற்ற அம்சங்கள் நில உரிமை பெற்ற உழவர்களிடமே விடப்பட்டு இருந்தன.

நில உரிமை பெற்ற உழவர்களில் பலர் தங்கள் நிலங் களை விளைச்சலில் பங்கு பெறும் வகையில் குத்தகைக்குக் கொடுத்தனர் என்று கூற அத்தாட்சி உள்ளது. இம்முறை இன்றும்கூட நாட்டின் பல பாகங்களில் நீடித்துள்ளது. 1940-50 ஆம் ஆண்டுகளுக்கிடையில், வங்காளத்தில் தேபாகா எழுச்சி முழுவதும் நிலச் சொந்தக்காரருக்கு மூன்றில் ஒரு பங்கை விட்டு குத்தகைதார்களுக்கு மூன்றில் இரண்டு பயி ரைக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப் படையிலேயே அமைந்து இருந்தது. இடைக்காலத்தி லும், பண்டையக் காலத்திலிருந்தே தொடர்ந்து கொண்டி ருக்கக் கூடிய, மூன்றில் ஒன்று என்ற விகிதத்தைக் காண்கி ருேம். எவருடைய பெயரில் களம் இருந்ததோ அந்த நிலச் சுவான்தாரால் விதை மற்றும் பிற உள்ளீடுகள் கொடுக்கப் பட்டால் விவசாயத் தொழிலாளிக்கு மூன்றில் ஒன்று கிடைத் தது என்று இடைக்காலத்திய அத்தாட்சி கூறுகிறது; ஆனுல் இந்த உள்ளீடுகளைத் தொழிலாளியே ஏற்பாடு செய்து கொண்டால் தனக்கு மூன்றில் இரண்டு எடுத்துக் கொண்டு நிலச் சுவான்தாரருக்கு விளைச்சலில் மூன்றில் ஒன்று

கொடுத்தான். குடியானவ உரிமையாளர்களில் கணிசமான சதவீதத்தினர் முற்றிலும் தங்களுடைய சொந்தத் தொழிலாளர்களைக் கொண்டே வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர் என்று நான் கருதமாட்டேன். ஆனால் இவ்விஷயத்தைப் பற்றி நமக்குக் கிடைக்கும் சான்றுகள் சுத்தமாகப் போதாது. இந்தச் சான்றுகளை ஆழ்ந்து அறிவது அவசியமெனினும், என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் நில உரிமை பெற்ற உழவர்களில் மிகச் சிலரே பயிர்த் தொழிலை தாங்களே மேற்கொண்டிருந்தனர் என்பதே.

நில உரிமை பெற்ற உழவர்கள் மில்கீயத் உரிமைகள் பெற்றிருந்தமையால், நாம் சிறிது பின்னர் விவாதிக்கப் போகும் பிற காரணங்களுக்காக அவர்களது ஜமீன்தாரி அதிகாரங்கள் அடக்கி வைக்கப்பட்டிருந்தா தொழிய, அவர்கள் ஜமீன்தார்கள் என்றே அங்கீகரிக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் சொத்துக்களை விற்கும் அதிகாரமும் பெற்றிருந்தனர். ஆண்களிடையில் வம்ச பரம்பரையான வாரிசுரிமை அங்கீகரிக்கப்பட்டது. பெண்கள் ஏன் விலக்கப்பட்டனர் என்பதை நாம் ஊகிக்கத்தான் வேண்டும். முஸ்லீம்களின் தனிப்பட்ட வாரிசுரிமைச் சட்டம் செல்லுபடியாகாது. இந்த விஷயத்தில் எல்லாச் சான்றுகளும் அதையே சுட்டிக் காட்டுகின்றன. சொத்துரிமை அல்லது வாரிசு மாற்றத்தினுடன் பட்டாவைப் புதுப்பிப்பதும் அவசியமாகக் கருதப்பட்டது. மிகப் பெரிய சொந்தக்காரர்களின் விஷயத்தில்—இதைப் பற்றி பின்னர் விவாதிப்போம்—மேல் அதிகாரிகளிடமிருந்து முறைமையான ஸனத் தேவைப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட கிஸ்தியைச்செலுத்துவது புதிய உரிமையாளரின் பொறுப்பு என்று இப்பட்டா தெரிவித்தது. இதற்காக அவர் ஒரு முசால்கா வும் (பொறுப்பேற்கும் வாக்குறுதி) மற்றும் ஒரு ஜாமீனியும் (ஜாமீன் தொகை அல்லது பிணையம்) ஒபபுவித்தார் அத்தகைய எல்லா நிலைமைகளிலும் ஜாமீன் ஏற்பாடு செய்யப்பட வேண்டியிருந்

தால் இந்தப் பழக்கம் கிராமத்தில் லேவாதேவிக்காரர்களின் தோற்றத்திற்கு வழி வகுத்த முக்கியத்துவம் வாய்ந்த காரணக் கூறுகளில் ஒன்ருகச் செயல்பட்டது. ரொக்கமாகப் பணம் கொடுப்பது சகஜமாகிக் கொண்டு வந்ததும், உள்ளூர் லேவாதேவிக்காரர் நிலச்சுவான்தார் கொடுத்த எந்த நாணயத்தையும் ஏற்றுக்கொண்டு, அதை ஒரு மாதிரியான நடைமுறை நாணயமாக மாற்றுவதற்கு **பாட்டா** (தரகுக் கூலி) கட்டணமாக வசூலித்தனர். தொடர்ச்சியான பயிர்த் தொழிலுக்கும், நிலம் பயிர் செய்யப்படாமலிருந்து கிஸ்தி குறைந்து விடாமல் இருக்கவும் நிலச்சுவான்தார் பொறுப்புள்ளவராக இருந்தார். **ஜின்ஸ்—ஏ—கமீல்** அல்லது உயர்ந்த பயிர் வகைகளைத் தொடர்ந்து பயிரிடப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் அவரே பொறுப்பு. **ஜின்ஸ்— —கமீல்** எனும் சொல் நம் கிராமங்கள் பலவற்றில் நிலவரித் துறைச் சொல் தொகுதியில், இன்னமும் வழங்கப்படுகிறது. அத்தகைய நில உரிமை உழவர் நிலத்தைத் துறந்துவிடின் அது தற்காலிகமாக வேறு எவருக்காவது அளிக்கப்படும். ஆனுல் அப்பொழுதும் அந்த உரிமையாளர் **மாலிகாளு** பெற்றுக் கொள்ளவும், மற்றும் எப்பொழுது அவர் நிலத்தை திரும்பி எடுத்துக் கொள்ளும் நிலையில் இருக்கிருரோ அப்பொழுது திரும்பப் பெறவும் அதிகாரம் உடையவர். இங்கே **மாலிகாளு** என்பது மொத்த விளைச்சலில் பத்து சதவீதம். இப்படிப்பட்டரின் முதன்மையான கடமை நிலவரியை ஒப்புவிப்பதும் அல்லது சமர்ப்பிப்பதுமே— மால்குஜாரி முதல் உரிமையாளராக எவர் இருந்தாரோ அவரே பேரரசின் நிலவரியைக் கட்டுவதற்கு பொறுப்புடையவராகக் கருதப்பட்டார். ஆனுல், தம்முடைய **மாலிகாளு** பங்காக பேரரசின் கிஸ்தியில் 10 சதவீதத்தை நிறுத்திக் கொள்ள அவருக்கு அதிகாரம் உண்டு.

இப்பொழுது, தேவையான அளவு பத்திரச் சான்றுகள் கிடைப்பதனுல் உண்மையிலேயே பயிரிடுபவர் கொடுத்தது

எல்லாம் பேரரசின் வருமானம் எனக் கருதப்பட்டது என்று கூறலாம். பேரரசின் வருமானத்திலிருந்து சட்டபூர்வமாகக் கழிக்கப்பட்டதே நடுவர்களின் அல்லது உழவர்களின் பங்கு. பேரரசிற்குரிய வருமானம், எவர் உண்மையாகப் பயிரிடுகிறரோ அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டதாக கருதப்பட்டதை விடக் கூடுதலானது என்பதைக் குறித்து ஒரு காலத்தில் தெளிவின்மை நிலவியது. எந்த அதிகாரி அல்லது உழவர் அல்லது நடுவர் ஆகியோர் உரிமை பெற்றிருந்த எந்த விதமான செலவும் அல்லது எந்தவிதமான சலுகைக் கொடையும் அல்லது எந்த விதமான வரியும் பேரரசரின் பங்கிலிருந்தே கொடுக்கப்பட வேண்டும் என்பது இப்பொழுது வெகு நன்ருகப் புரிகிறது. **மால்** (நிலையான வரி- வருவாய்) அல்லது **ஜிஹாத்** (உள்ளூர் வரிகள்) மூலமாக வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகையைப் பற்றிய கணக்கு-விவரத்தை அரசாங்கத்திற்குச் சமர்ப்பிப்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை. இவ்விரு வகைகளையும் தவிர மூன்ருவது வகையும் இருந்தது; **ஸயிர் ஜிஹாத்** என்று சொல்லப்பட்டது—நில வரியைத் தவிர்த்து மற்ற வரிகள். இவை அனைத்தும் சேர்த்து **அப்வாப்**கள் எனக் கூறப்படலாயின. முந்தைய பிரிட்டிஷ் பத்திரங்கள் வருவாயை விசேஷ வரிகளிலிருந்து (cess) பிரித்துக் காட்ட முயற்சி எடுத்துக் கொள்கின்றன. இது ஸர் ஜான் ஷோர் அவர்களாலும் விவரமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. இது 'அமினி கமிஷன்' அறிக்கையிலும் "அன்னைல்ஸ் ஆஃப் ரூரல் பெங்கால்" என்ற நூலின் (Annals of Rural Bengal) பிற்சேர்க்கைகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள, வாரன் ஹேஸ்டிங்ஸ் அவர்களின் மூன்று நான்கு குறிப்புகளிலும் காணப்படுகிறது.

அக்பர் மற்றும் ஷெர்ஷா அவர்களின் காலத்தில் சகஜமாக இருந்த **முக்தாய்** முறை அல்லது **நாஸக்** முறை என்ற இரு முறைகளும் மூர்லண்ட் அவர்களால் குழுத் தீர்வை என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பொருள் விளக்

கத்தை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஒரு கிராமத்தின் வருவாய் மொத்தத் தொகையாக முந்தையத் தஸ்தாவேஜிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்ற வரையில் மூர்லண்டின் கருத்து சரியே. ஒரு முறை வருவாய் நிச்சயிக்கப்பட்டு விட்டால் அதைக் கட்ட வேண்டிய பொறுப்பு கிராமத் தலைவரை மரபுப்படி வந்தடைந்தது. அவரே இத் தொகையை ஒவ்வொரு உரிமையாளருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டத் தொகைக்கு கணக்கு விவரம் ஒப்புவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஷெர்ஷா அவர்களின் காலத்திலிருந்தே இருந்தது ஷெர்ஷா அவர்களின் செயலாட்சியில் இருந்த குறுகிய காலத்திற்குள் இது பொதுவான நடைமுறையாக வந்திருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், அக்பர் அவர்களுடைய காலத்திலிருந்து இது பொது நடைமுறைக்கு வந்து விட்டது. மறுபடியும், வருவாய்க் கணக்கு விவரங்கள் ஒருக்கால், தனிப்பட்ட முறையில் கொடுக்கப்படவில்லை என்பதை நான் மேற்கோள் காட்டிய அர்ஸாத்துக்களின் அடிப்படையில் ஊகித்தறிய முடியும். தனி நபரிடமிருந்து எவ்வளவு வருவாய் வர வேண்டும் என்பது கூறப்படவில்லை; ஆனால் ஒவ்வொரு பயிரின் கீழிலும் மொத்த வருமானம் கொடுக்கப்பட்டிருந்தது, பயிர் செய்யப்பட்ட மொத்தப் பரப்பு அல்லது விளைவிக்கப்பட்ட மொத்த அளவு தெரிவிக்கப்பட்டது, மற்றும் அரசுக்குரிய பங்கும் எப்பொழுதும் தனியாகக் குறிப்பிடப்பட்டது.

ஆகையால், அரசைப் பொறுத்த வரையில் நில உரிமை பெற்ற உழவரின் முக்கியமான பணி, வேளாண்மையை விடாது நடத்துவதும், உயர்ந்த பயிர்களைப் பயிரிடுவதும் மற்றும் வருவாயை பேரரசின் அதிகாரமுடையவர்களிடமோ அல்லது உள்ளூர் அதிகாரிகளிடமோ கொடுப்பதுமே.

பயிர்த் தொழிலின் அமைப்பில் குத்தகைதார் பொருளாட்சியும் ஒரு முக்கியப் பங்கேற்றிருந்தது. சுயேச்சை உழவர்ப் பொருளாட்சிக்கும் மற்றும் குத்தகைக்குப் பயிரிடுபவர் பொருளாட்சிக்கும் இடையில் ஒரு அடிப்படை உறவு இருப்பதை மிகவும் தெளிவாகக் காணலாம். ஒரு குறிப்பிட்ட கிராமம் அல்லது வட்டாரத்தில் உள்ள படை அல்லது வர்க்க நிலையைச் சார்ந்தோ, அல்லது நாம் பெற்றுள்ள நிர்வாகத்தின் வகையைச் சார்ந்தோ அரசியல் காரணக் கூறுகளின் விளைவிஞல் சுயேச்சை உழவர் எளிதாக குத்தகைதாரராகவோ அல்லது குத்தகைதாரர் சுலபமாக சுயேச்சை உழவராகவோ மாறக்கூடும். குறிப்பாக இரண்டு, மூன்று உதாரணங்கள் என்னைக் கவர்கின்றன. கிழக்கு ராஜஸ்தானில் மிஞக்கள் முதன்மையான சுயேச்சை உழவர்குழுக்களாக இருந்தனர்; பாபர் அவர்கள் காலம் வரையிலும் இவர்கள் அப்பிரதேசத்தின் ஜமீன்தார்களாகாவே கருதப்பட்டனர். பிறகு கொஞ்சம், கொஞ்சமாக ராஜபுத்திரர்களும் சில இடங்களில் ஜாத்களும் மிஞக்களின் அந்தஸ்தை குத்தகைதாரராக தாழ்வடையச் செய்தனர். சில இடங்களில் அவர்கள் குத்தகைதாரராக இருப்பதும் நின்று நிலமில்லாத தொழிலாளர்களின் நிலைக்கு வலிமை குன்றினர். அவர்களில் அநேகர் நாடோடிகளாக மாறினர். சமீபக் காலம் வரையிலும் கூட அவர்கள் குற்றவாளிகளின் இனத்தில் ஒருவராகவே வகைப்படுத்தப்பட்டனர். இது நிகழ்ந்தது ஏறக்குறைய 400 வருஷ கால கட்டத்தில் ஆகவே நாம் எளிதாக ஆராய்ச்சி செய்து அவர்களுடைய சரித்திரத்தைக் கண்டு பிடிக்க முடியும். ஜாத் போன்ற மற்றப் பிரிவினர்கள் தாங்கள் அரசியல் துறையிலும் பயிர்த் துறையிலும் ஒரு முறை வலுவடைந்ததும் ஜமீன்தாரர்களாக உயர்ந்தது மட்டுமன்றி ஜமீன்தார்கள் என்ற முறையில் மத்தியஸ்த உரிமைகளையும் பெற்று மற்ற வகுப்பினரை, முக்கியமாக அஹீர்களை, குத்தகைதாரர்களுக்கும் கீழ்ப்பட்ட நிலைக்

குச் சரியச் செய்தனர்; ஏனெனில் குத்தகைகாரர்களுக்கு நான் சிறிது பின்னர் விவாதிக்கப்போகிற—சில அதிகாரங்கள் இருந்தன, அவை இவர்களிடமிருந்து பறித்துக் கொள்ளப் பட்டன.

ஆகவே குத்தகைதாரர் பெருளாட்சி, அரசியல், மற்றும் சமூகப் பொருளாதாரக் காரணக் கூறுகளின் விளைவினுல் சுயேச்சை உழவர் பொருளாட்சியிலிருந்து வெளிப்படையாகவே வளர்ந்தது. அரசியல் காரணக் கூறுகள் மிகவும் தெளிவாக இருக்கின்றன. சமூகக் காரணக்கூறுகளில் ஜாதி முனறக்கு நான் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறேன். வர்ணு சிரமப்படி முறையில், ஏதாவது ஒரு வட்டாரத்தில் உள்ள முதன்மையான வகுப்பினர் உயர்வு பெற்றதும் தமக்கு முன்னர் செல்வாக்கு பெற்றிருந்த வகுப்பின் அந்தஸ்தை அடையக் கோரினர். இச்செயல் முறை முழுவதும் செயல் விளைவுத் தொடர் மாதிரி இயங்கியது. ஏனென்ருல், உழவர்கள் அரசியல் ரீதியாக மதிப்பிழக்கவே அவர்கள் சமுதாயத்திலும் தாழ்த்தப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; பிறகு சமுதாயத்தில் அவர்களுடைய தாழ்த்தப்பட்ட நிலை அவர்கள் பெற்றிருந்த அதிகாரங்களை இழக்கச் செய்ததற்கு காரணமாகக் காட்டப்பட்டது.

குத்தகைதார் பொருளாட்சியின் தோற்றத்திற்கு வழி வகுத்த பலப் பொருளாதாரக் காரணக் கூறுகளை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது. இதுபோன்ற காரணக் கூறுகளில் ஒன்று, எங்கு அதிகமாக முதலீடுதேவையோ அங்கு இல்லாமை. மேன்மேலும் அதிகமாக உள்ளீடுகள்தேவைப்பட்ட கிழக்கு ராஜஸ்தானின் சில பகுதிகளில் ரபி பொருளாட்சியின் ஒப்பு மதிப்பு வளர்ச்சியைக் குறிப்பிட்டேன். ஆனுல் மேன்மேலும் உள்ளீடுகள் எங்கிருந்துவரும்? என்னுடைய அபிப்பிராயத்தில், இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுயேச்சை உழவர், இந்த உள்ளீடுகளைத் தருவிக்க பொருளாதார ரீதியில் வலுவுடையவராக இல்லை.

சமூகத்தில் செல்வாக்கு மிக்க உள்ள குழுவினர்களால்தான் இவற்றைத் தருவிக்க முடியும். இச்செயல் முறையில் இவர்கள் சுயேச்சை உழவர்களை குத்தகை விவசாயிகளாக கீழிறக்க முயற்சி செய்வது இயல்பு.

இருப்பினும் பல விதங்களில் குத்தகை விவசாயியினுடைய அதிகாரங்கள் நில உரிமை பெற்ற உழவருடை அதிகாரங்களை ஒத்திருந்தன முக்கியமாக குத்தகைப் பாதுகாப்பு பற்றிய விஷயத்தில். நிலத்திற்குத் தேவை நெருக்கடி இல்லாமை-இதற்கு நிறைய அத்தாட்சிகள் உள்ளன-குத்தகைதாரர்களுக்கு அனுபோக உரிமையின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளித்தது. எங்கு ஒரு குத்தகைதாரர் நிலத்தைவிட்டு விலகினாலும், அவர் தன் சொந்த நிலத்தில் தொடர்ந்திருக்கச்செய்ய கட்டாயப்படுத்தலாம் அல்லது இணங்க வைக்கப் படலாம், என்பதற்கு உதாரணங்கள் இருக்கின்றன. இது சம்பந்தமாக பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதற்கு நிறைய உதாரணங்கள் கிடையாது. மற்ற பல சமநிலைக் காலத்தினர் இவ்விதம் நிகழ்ந்தமைக்கு அபிப்பிராயங்கள் தெரிவித்திருப்பினும், அசல் பத்திரங்களில் எண்ணி மூன்று உதாரணங்கள் தான் நான் பார்த்திருக்கிறேன். மூன்று பத்திரங்களில் ஒன்று பீஹார் சம்பந்தப்பட்டது. இங்கே, ஒரு ஜமீன்தார் தன்னுடைய குத்தகைதாரரை அவருடைய சொந்த நிலத்திற்கு திரும்பி வரச் செய்வதற்காக மற்றொரு ஜமீன்தாரிடம் அவருடைய துருப்புக்களை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறார்.

ஆனால் குத்தகைதாரர் தன்னுடைய நிலத்தில் தொடர்ந்து இருக்கத் தூண்டப்பட்டதற்கும். இணங்கச் செய்யப்பட்டதற்கும் பற்பல உதாரணங்கள் இருக்கின்றன. இது போன்ற நிகழ்ச்சிகள் ஷாஜஹான் அவர்கள் காலத்திலும் காணப்படுகின்றன; மற்றும் அவுரங்கசீப்பின் ஆட்சியில் கிட்டத்தட்ட 15-20 பத்திரங்களும், 18ம் நூற்றாண்டுக்குரிய

அநேகப் பத்திரங்களும் பார்த்திருக்கிறோம். இவை எல்லாமே குத்தகைதாரர்களுக்கு, தங்கள் நிலங்களுக்கு திரும்பி வருவதற்காக அளிக்கப்பட்ட தூண்டுதல்களைப் பற்றிக் கூறுகின்றன. வாரணுசி நிகழ்ச்சி பற்றிய செய்தியிலிருந்து தெரிவது-குத்தகைதாரர் திரும்பி வருவதற்கென அவர்களுக்கு திரும்பி வர நேரிடும் செலவையும் தவிர மேற்கொண்டு ஒரு ரூபாய் ரொக்கமாகவும் அளிக்கப்பட்டது. அந்நாட்களில் ஒரு ரூபாய் இன்று பெற்றிருப்பதை விட மிக அதிகமாக வாங்கு திறன் மதிப்பு உடையது; ஒருக்கால் இருபத்தெட்டு பங்குகள் அதிக மதிப்பு பெற்றிருந்தது என்பது சரியான ஊகமாக இருக்கக் கூடும்.

இப்பொழுது நான் சிறிது வழி விலகி ஒரு விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்-நான் ஆராய்ந்துள்ள தஸ்தாவேஜுகளின் அடிப்படையில் கிராமங்கள் கைவிடப்படுவதைக் குறிக்கும் அநேக உதாரணங்களைக் காணவில்லை. உண்மையாகவே 17ம் நூற்றாண்டில் இருந்தாற்போலவே கிராமங்கள் கவனத்திற்குரிய முறையில் தொடர்ச்சியாக உள்ளன. 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பல மாகாணங்களுடைய கிராமப்பட்டியல்களையும் பார்த்திருக்கிறேன். மற்றும் அந்தக் கிராமங்களில் 75 சதவீதத்துக்கும் மேற்பட்டவைகளை நவீன கிராமவரைபடங்களில் அடையாளம் காணவும் என்னால் முடிந்தது. நான் நிரூபித்த ஒருமை சரியாக இருப்பின், இது உண்மையாகவே கவனத்தைக் கவரும் தொடர்ச்சியே. மீண்டும் அநேக அர்ஸத்தாக்கள் கிராமங்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கின்றன. பர்கானக்களின் எல்லைகள் மாறுவதையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் கைவிடப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை உண்மையில் மிகவும் சொற்பம்.

இந்த எல்லா விஷயங்களையும் கருத்தில் கொண்டு, பிறகே, குத்தகைகாரர் பொருளாட்சி முற்றிலும் திடமான பொருளாட்சியே என்ற அபிப்பிராயத்தைத் தெரிவிக்கி

றேன். இருப்பினும் குடியேறப்பட்டப் பிராந்தியங்களில் நில உடைமைகளைத் துண்டாடுவது, கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும் மற்றும் வேறு இடங்களுக்கும் இடப்பெயர்ச்சி அடிக்கடி ஏற்பட வெவ்வேறு விதங்களில் வழி வகுத்தது. நிலத்தைக் கூறுபோடுதல் எங்கு அதிகமாக இருந்ததோ மற்றும் எங்கு மேல் ஜாதியினர் புதிய பிராந்தியங்களில் குடியேறும் நிலையில் இல்லையோ அல்லது காடுகளைத் துப்புரவு செய்யும் நிலையில் இல்லையோ—ஏனெனில் இது மிகவும் கடினமான மான வேலை—அங்கு அவர்கள் அநேகமாக படைத்தொழில் துறையில், வாழ்க்கை நடத்துவதற்காகச் சேர்ந்தனர். பக்ஸாரைச் சேர்ந்த ராஜபுத்திரர்கள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. கீழ் ஜாதியினரைக் குறித்து வேறு விதமான சான்றுகள் உள்ளன. கீழ் ஜாதியினர் எங்கேயும் நிலம் வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை. ஆதலால் மக்கட் தொகை மிகுதியாக இருந்தால்-அதாவது, தங்கள் சுற்றுப்புறங்களின் இன்னல்களையும் மீறி அவர்கள் பிழைத்திருந்தால், பட்டணங்களுக்காவது அல்லது நகரங்களுக்காவது சென்று வேலை தேட முயல்வர். இல்லாவிடின், முதற் குடியிருப்பில் அவர்கள் வாழ்ந்து வந்த அதே முறைமையில், வேறு கிராமத்தில் குடியேறி வாழ அழைக்கப்படலாம்

இப்பொழுது நான் கூறிக் கொண்டிருப்பது மிகத் தற்காலிகமானதொரு அனுமானம். அரசாங்கம் இடைவிடாது பயிர்த்தொழிலை விரிவாக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கையிலும், மேலும் ஒரே சமயத்தில் கைவினைத் தொழில்களிலும் நகரங்களிலும் வியக்கத்தக்க பெருக்கம் ஏற்பட்டிருக்கையிலும், நிலத்திற்குத் தேவை நெருக்கடி மிக்க கொஞ்சமாக இருந்தது எங்ஙனம்? ஒரு பக்கம் நிலத்தில் மக்கட் தொகை நெருக்கடி இல்லாமையையும், மறு பக்கம் பெருகிக் கொண்டிருக்கிற நகரப்புற ஜனத்தொகையையும், வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த கைத்தொழில்களையும் மற்றும் பிற

தொழில்களேயும் கவனிக்கிருேம். 16-ம் நூற்ருண்டின் இடைப் பகுதியிலிருந்து 18-ம் நூற்ருண்டின் இடைப் பகுதி வரையில் கைத் தொழில்ப் பொருட்கள் உற்பத்தி பிரமாத மாகப் பெருகியது என்பதில் சந்தேகம் கிடையாது. கலப் பற்ற விவசாயத் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் மிகவும் பலம் பெற்றவர்களாக இருந்திருக்க முடியாது. ஏனென்ருல் அவர்கள் கித்மதிப்ரஜா ஆகவும், பாஹிகாஷ்ட் பிரிவுகளி லும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். விவசாயத் தொழிலா ளர்களின் இரு மிகப் பெரிய பிரிவுகள் இவை இரண்டே. இவற்றைத் தவிர பயிரில் பங்கு பெறும் சில வகையினங் களும்—முக்கியமாக அடுத்திருந்த பழங்குடிப் பிரதேசங்க ளில்—இருந்தன. அருகாமையிலிருந்த பிராந்தியங்களில் வாழ்ந்த பழங்குடி மக்கள் பயிரில் பங்கு பெறும் முறையில் தொழில் புரிய அழைக்கப்பட்டனர் என்பதற்கு அநேகச் சான்றுகள் இருக்கின்றன. பயிர்த் தொழில் புரிந்ததும், விளேச்சலில் தங்களுக்குரிய பங்கை எடுத்துக் கொண்டு திரும் பிச் செல்வார்கள், உண்மையில் அவர்கள் நிலேயாகக் குடி யேறவில்லே. இதிலிருந்தே அவர்களுடைய அந்தஸ்து குத்த கைக்குப் பயிரிடுபவர்களுடைய நிலேயை விட மட்டமாக இருந்தது என்பது தெரிகிறது.

குத்தகைக்குப் பயிரிடுபவர்களுக்கு தங்கள் நிலங்களே விற்கவோ, அல்லது பராதீனப்படுத்தவோ அதிகாரம் இல்லே. இவர்களுக்கும் நில உரிமை பெற்ற உழவர்களுக்கும் இடை யில் உள்ள மிகப்பெரிய வித்தியாசம் இதுவே. ஆனுல் குத் தகைக்குப் பயிரிடுபவர் தன்னுடைய நிலத்தை விட்டு விலகி ஞல், அக்கிராமத்திலுள்ள மற்ற வேளாண்மையாளர்கள் அந்நிலத்தைப் பயிர் செய்ய அழைக்கப்பட்டு, குத்தகைக் குப் பயிரிடுபவர் திரும்பி வருகையில் அவருடைய பங்கைக் கொடுப்பார்கள் இதைத் தெரிவிக்கும் நிறையச் சான்றுகள் இருக்கின்றன. குத்தைகக்குப் பயிரிடுபவரால் விட்டுவிடப்

பட்ட நிலத்தைப் பயிரிடுவது மற்ற வேளாண்மையாளர்களின் கட்டாயமான கடமை. ஆனுல் குத்தகைக்குப் பயிரிடுபவர் திரும்பியதும், சில சமயங்களில் நான் ஒரு பத்திரத்தில் பார்த்தாற்போல்—மூன்று வருஷங்களுக்குப் பிறகு ஒருவர் திரும்பி வந்ததை—தன்னுடைய நிலத்தைத் திரும்பப் பெறவும், விளைச்சலில் தன்னுடைய பங்கையும் பெற்றுக் கொள்ளவும் உரிமையுடையவராக இருந்தார். நிஜமான பங்கு என்ன என்பது பத்திரங்களில் சொல்லப்படவில்லை. உண்மையாகவே தன்னுடைய நிலத்தைப் பயிர் செய்யாத, குத்தகைக்குப் பயிரிடுபவரின் பங்கு எவ்வளவு என்பதை நான் அறியேன்.

3 அரசாங்கமும் நிலையற்ற நிலம் படைத்த வகுப்பினரும்

எங்கு அதிக அளவில் குத்தகைதாரர்களின் வேளாண்மை காணப்படுகிறதோ, அங்கே பயிர்த் தொழிலில் ஈடுபடாத ஆதார ஜமீன்தார்கள் (Primary Zamindars) அநேகர் இருப்பார்கள் என வாதிப்பது சரியானதே. நான் மிகுந்த ஆலோசனைக்குப் பிறகே, உடைமை உரிமை ஜமீன்தார் (Proprietary Zamindar) என்னும் சொல்லைத் தவிர்த்து ஆதார ஜமீன்தார் என்ற சொல்லை உபயோகிக்கிறேன். நான் முன்னரே தெரிவித்தாற்போல் உரிமைகள் மாறிக் கொண்டேயிருந்தன. ஆகவே ஒரு காலத்தில் உடைமை உரிமை ஜமீன்தாராக இருந்தவர்கள் பிறிதொரு சமயம் சொத்துரிமையை இழந்து வேறு எவராவது நடுவராக (intermediary) இருப்பவர் நிலத்தின் மேல் நேரடி உரிமைகளைப் பெறக்கூடும். ஆகவேதான், நான் உடைமை உரிமை ஜமீன்தார் என்ற சொல்லைக் காட்டிலும் ஆதார ஜமீன்தார் என்ற சொல்லையே பயன்படுத்துகிறேன்; அதாவது, ஆதார ஜமீன்தார் என்றால் சிறிய ஜமீன்தாராக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. அவர் பெரிய ஜமீன்தாராகவும் இருக்கலாம்; நிலத்தின் மேல் நேரடி உடைமை உரிமை அதிகாரம் வகிக்கும் குடியானவ உரிமையாளராகவோ அல்லது குத்காஷ்ட் செய்பவராகவோ (தன்னுடைய நிலங்களைப் பயிர் செய்பவர்) அல்லது தன் நிலங்களைக் குத்தகைதார் விவசாயிகளிடம் கொடுத்திருக்கும் நபராகவோ இருக்கலாம் என்பதே அதன்

பொருள். நடை முறையில் ஆதார ஜமீன்தார்கள், விவசாய நிலங்களுக்கும், மற்றும் குடியிருப்பு நிலங்களுக்கும் உடைமை உரிமை அதிகாரம் பெற்றிருந்தனர். இந்தப் பிரிவில் தாங்களாகவோ அல்லது கூலியாட்கள் மூலமாகவோ பயிர்த் தொழில் புரிந்து வந்த குடியானவ உரிமையாளர்களை மட்டுமின்றி, ஒன்று அல்லது பல கிராமங்களுக்கு உரிமையாளர்களையும் சேர்க்கலாம். பேரரசின் விவசாய நிலங்கள் அனைத்தும், ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்த ஆதார ஜமீன்தார்களிடமே இருந்தன. ஆதார ஜமீன்தார்களின் உரிமைகள் பரம்பரையானவை, மற்றும் மற்றவருக்கு மாற்றத்தக்கவை. 16ம் நூற்றுண்டு வரை தேதியிடப்பட்ட பற்பல விற்பனைப் பத்திரங்கள் இன்னும் கிடைக்கின்றன. சில சாசனப் பத்திரங்கள் அலஹாபாத் மத்திய பதிவேடுகள் அலுவலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஜமீன்தார்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தனது கடமை என்று கருதிய முகலாய அரசாங்கம், மாற்றுரிமைப் பத்திரங்களை காஜியின் அவையில் பதிவு செய்ய ஊக்கமளித்தது.

உழவரல்லாத இந்த ஆதார ஜமீன்தார்கள், அதே சமயத்தில் வேறுபிராந்தியங்களில் ஆட்சித் தலைவர்களாகவும், அல்லது பலதரப்பட்ட நடுவர்களின் மீதும், தங்கள் அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர். இக்காலம் முழுவதிலும் ஆதார ஜமீன்தார்களின் நிலையில் தொடர்ச்சியான மாற்றம் இருந்ததைப் பார்க்கிறோம். ஒரு பக்கம் உயர்தர ஜமீன்தார்களும் மற்றும் அரசாங்கமும் மறு பக்கம் உழவர் குலமும் இருக்க, இடையில் அகப்பட்டுக் கொண்டிருந்த இந்த ஜமீன்தார்கள் பலர், இடைவிடாமல் தங்கள் நிலையை அபிவிருத்தி செய்து கொள்ள முயன்றதில், இரண்டு பக்கமும் இவர்களுக்கு அடிக்கடி மோதல் நேர்ந்தது. இந்த ஜமீன்தார்கள் மேலிடத்து நிர்ப்பந்தங்களை

தாங்களாகவே சமாளிக்கக் கூடியவர்களாக இல்லாவிடின் வரிச்சுமைகளை பயிரிடுபவர்களிடம் தள்ளி விட்டனர்; இவ்வாறு விவசாயிகள் பொருளாதார அடிப்படையில் தீவிரமாகச் சுரண்டபடுவதற்கு காரணமாக இருந்தனர். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பொருளாதார நோக்கில், இவர்கள் பிற்போக்கான பங்கு ஏற்றிருந்தனர். ஆனாலும், பல சமயங்களில் அரசாங்கத்தின் வரிப் பளுவை எதிர்க்க, ஜாதி மற்றும் குலக் கவர்ச்சியை தங்களுக்கு ஆதரவு தேட உபயோகித்துக் கொண்டு, உழவர்களின் கலகங்களுக்குத் தலைமை வகித்தனர், எங்கு கலகங்கள் சாத்தியமில்லையோ அங்கு இந்த ஜமீன்தார்களில் பலர் பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டால் தவிர வரி கொடுக்க மறுத்தனர்.

இரண்டாவது வகை ஜமீன்தாரி உரிமையானது நடுத்தர உரிமை. இது உடைமை உரிமை அல்ல, இதை சேவை உரிமை அல்லது சேவை செய்யும் கடமை எனலாம். இடைக்காலப் பத்திரங்களில் இது **கித்மத்** என்று சொல்லப் படுகிறது. ஜமீன்தாரி **மால் குஜாரி**யாகவும் **கித்மத் குஜாரி**யாகவும், அல்லது இணைந்தும் இருக்கலாம். **மால்குஜாரி**யாக இருக்குமிடத்தில், அது (ஜமீன்தாரி) ஆதார உரிமை; **கித்மத் குஜாரி**யாக இருக்குமிடத்தில் அது நடுத்தர உரிமை அல்லது கடமை. எண்ணிலடங்கா வகைகளைச் சேர்ந்த நடுவர்கள் இருந்தனர். **முக்காதம்** அல்லது **முக்கியா** என்பவரது விஷயத்தைப் பார்க்கலாம். இவர் கிராமத்திலிருந்த ஆதார ஜமீன்தார்களிலிருந்தே வழக்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சில சமயங்களில் அவர்களில் (ஆதார ஜமீன்தார்களில்) மிகவும் முக்கியமானவர்களே பொறுக்கப்பட்டு, அதற்கான ஊதியமும் கொடுக்கப்பட்டது. **முக்காதம்** செய்த உதவிகளுக்காக அவருக்கு வழக்கமாக அளிக்கப்பட்ட ஊதியம், சலுகை விகிதத்தில் வரி விதித்தல். ஆனால் சில சமயங்களில், இடைக்கால துறைச்சொல் தொகுதியில் **நுஸ**

மாத் முக்காதமீ என்று சொல்லப்பட்ட பல்வேறு தள்ளுபடிகளுக்கும் உரிமைபெற்றிருந்தனர். இந்த வழக்கம் சுல்தான்கள் காலத்திற்கும் முன்பே இருந்தது என்பதை, **ப்ரதிஹார ப்ரஸ்த, அக்ஷபதல் ஆதாய,** என்று பல வகையான அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டதைக் கேள்விப்படுவதிலிருந்தே நாம் தெரிந்துகொள்ளலாம்.

பிறகு **பர்கானுவின் சௌதரீ** இவர் ஆதார ஜமீன்தார்களின் பிரிவைச் சார்ந்தவராயினும், முதன்மையான ஜமீன்தார்களில் ஒருவரே. சௌதராயீ ஒரு பதவியே ஆயினும், பரம்பரையாக வருவது. சௌதரீயின் முக்கியப் பணி நில வரி வசூலில் உதவி புரிவதே. அவருக்குப் பலரகப்பட்ட சலுகைகளுடன், மொத்த வருமானத்தில் ஒருகுறிப்பிட்ட விகிதத்தொகையைப் பெறவும் உரிமை இருந்தது. தன்னுடைய பிராந்தியத்தில் சௌதரீ ஆதார ஜமீன்தாராக இருந்தார்; மற்ற அநேக ஜமீன்தார்கள் சம்பந்தப்பட்டவரையில் சௌதரீ என்ற முறையில் தன்னுடைய அதிகாரத்தைப் பிரயோகித்து, அவர்களிடமிருந்து அரசாங்கத்தின் சார்பாக வருமான வசூல் செய்து கொண்டிருந்தார்.

நடுவர்களில் முக்கியமானவர் **தாலுக்தார்** இவரும் **சௌதரீயைப்** போன்றே பணியாற்றி வந்தார். இவர் குறிப்பிடப்பட்ட பிராந்தியத்தில் வருமான வசூல் செய்ய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஜமீன்தார்கள், 17-ம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் **தாலுக்தார்**கள் என்ற பரம்பரைப் பதவியினால் அறியப்பட்டனர். அயோத்தியின் (அவத்) **தாலுக்தா**ருக்கும், வங்கத்தின் **தாலுக்தா**ருக்கும் மிகுந்த வித்தியாசம் இருந்தது. அயோத்தியில் **தாலுக்தார்** மிகவும் பெரிய மனிதர். பல பெரிய ஜமீன்தார்களிடமிருந்து வருமானம் வசூல் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தவர். வங்காளத்தில் மிகப் பெரிய **ஜமீன்தாரி**கள் நிறுவப்பட்டிருந்த

மையால், பெரிய ஜமீன்தார்கள் தங்களுடைய சொந்த ஜமீன்தாரி அதிகாரங்களை, தாலுக்தார் எனப்பட்ட தங்களுக்குக் கீழ்ப்பட்ட நடுவர்களிடம், பிரித்துக் கொடுத்தனர். ஆகவே வங்காளத்தில் தாலுக்தார் ஒரு சிறிய நடுவர்தான். ஆனால் அயோத்தியிலோ அவர் மிகப் பெரிய நடுவர். ஹைதராபாத்திலும் இதே நிலைமை. 1946—47 வரையிலும் கூட ஹைதராபாதில் மாநில ஆட்சியாளர் (ஜில்லா கலெக்டர்) என்பதற்குச் சமமான பதவி தாலுக்தார், தாலுக்கா வின் தலைவர்—இந்த அதிகாரியின் ஆணைக்குட்பட்ட பிரதேசத்தையும் குறிப்பது இச்சொல்.

இவரைத் தவிர, உற்பத்தி, நிலஉரிமை, செலுத்தப்பட்ட வருமானம், விதைக்கப்பட்ட பயிர்கள் ஆகியவைகளைப் பற்றிய முழுத் தகவல்களுக்கும் பொறுப்பானவராகக் கருதப்பட்டவர் கானுங்கோ. கானுங்கோ என்ற சொல் முதலில் எப்பொழுது தோன்றியது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஷெர்ஷா அவர்களின் காலத்திலிருந்து கானுங்கோ, நிச்சயமாக, நடுவர்களில் முக்கியமானவராக இருந்து வந்தார். டாக்டர் கயூமுத்தீன் அஹமது அவர்களின் 'தாபங்கா ராஜ்' என்னும் கட்டுரைக்கு[3] நான் கடன் பட்டுள்ளேன். இந்த அரசு உண்மையாகவே டிர்ஹீத் ஸர்க்காரின் சௌதுரயீ மற்றும் கானுங்கோயீயிலிருந்து உருவாயிற்று என்று அவர் இதில் குறிப்பிட்டிருக்கிறார். ஆகையால் இது நிகழ்ந்து கொண்டிருந்த மாறுதல்களின் செய்முறையைப் பற்றியும் உங்களுக்குத் தெரிவிக்கிறது. வேறுவிதமாகக் கூறி

3 இண்டியன் ஹிஸ்டாரிகல் ரெகார்ட்ஸ் கமிஷன் ப்ரொஸீடிங்ஸ், வால்யூம் XXXVI (Indian Histlorical Records Commission Proceedings). பாகம் II 1961 பக் 89—98.

ஞல், **சௌதுராயீ** அல்லது **கானுங்கோயீ** அளிக்கப்பட்ட நபர் மிகவும் செல்வாக்கு மிகுந்தவராகவும் இருந்து, மேல் மட்டத்து அதிகாரிகளின் ஆதரவையும் பெற்றிருந்தால், மற்ற ஜமீன்தார்கள் மீது ஆதார ஜமீன்தாரி அதிகாரங்களைப் பெற முயற்சித்தனர். இதன் விளைவாக அவரது நிர்வாகத்திற்குட்பட்ட சுயேச்சை உழவர்கள் மற்றும் சிறிய ஜமீன்தாரீகளின் நிலை தாழ்வடைந்தது.

பிறகு நாம் காணும் இன்னொரு வருமான அதிகாரி, நடுவராகப் பணி புரிந்த **குத்**. இச்சொல்லின் பிறப்பைப் பற்றி நான் அறியேன். ஸமஸ்க்ருத வார்த்தையான **கூத** என்பதிலிருந்து (**கிராம கூத, ராஷ்டிர கூத** என்பவற்றில் இருப்பது போல) உருவாகி, பாரசீக மொழியில் குத் என்று மருவி இருக்கலாம். அல்லது அது அராபிய மொழியிலிருந்தும் வந்திருக்கக்கூடும்.4 ஆனல் இத்துறைச் சொல், துருக்கிய சுல்தான்களினுடைய4 ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்திலிருந்தே காணப்படுகிறது; தவிரவும், பிரிட்டிஷார் வங்காளத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும் வரையிலும் உபயோகத்தில் இருந்து வந்திருக்கிறது.

ஒப்பந்த உழவு அல்லது வருமானத்திற்காக உழுது பயிரிடுதலைக் குறிக்கும் மற்ருெரு சொல் **இஜாரா**. ஒரு

4 பேராசிரியர் எஸ். எச். அஸ்காரி என்னிடம் தெரிவிப்பதாவது: **குத்-ஏ-கல்ஜ்** என்னும் சொல் பாட்னவில் உள்ள குதாபச்ஷ் நூலகத்தில் இருக்கும் ''முக்துபாத்-ஏ-முஜாபர் ஷம்ஸ் பல்கி'': (Muktubat-i-Muzaffar Shams Bhalki) என்ற பதினன்காம் நூற்ருண்டு நூலில் காணப்படுகிறது. இது பரனி அவர்களாலும் அடிக்கடி கையாளப்படுகிறது.

மொத்தமான தொகைக்கு **இஜாரா** அளிக்கப்படலாம் என்பது தெளிவாகவே இருப்பினும், அது அதிகமாக வழக்கத்தில் இல்லை. சில சமயங்களில் **இஜாரா** குறிப்பிட்ட அறுவடை அல்லது பயிர்களின் வரி வசூல் உரிமையாகவும் வழங்கப்படலாம். **இஜாராதாரி** என்பதன் பொருள், **இஜாராதாரி** வருமானத்தைப் பேரரசின் சட்டங்களை அனுசரித்து, வசூல் செய்து பேரரசின் கஜானாவிற்கு விவரமான கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும்; இதற்கு பதிலாக சில சலுகைகளோ அல்லது அவருக்கென தனியான வீதாசாரமோ அளிக்கப்படும். ஒரு குறிப்பிட்ட தொகைக்கு **இஜாரா** செய்யபடுகிறது. எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட தொகைக்குதான் **இஜாரா** செய்யப்பட்டது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் எனக்குத் தெரிந்தவரை அசல் **இஜாரா** பத்திரங்கள் இவ்வெண்ணத்தை ஊர்ஜிதம் செய்யவில்லை.

பிறகு, **பட்டாதார்** எனும் சொல், ஒரு பொது நோக்கில் பயன்படுத்தப்படுகிறது. எல்லாவற்றுக்கும் **பட்டா** கொடுக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரிந்ததே. ஆனால் சில சமயங்களில் **பட்டாதார்** என்பது வருமான வசூல் உரிமை அளிக்கப்பட்ட, ஆனால் அந்தஸ்து என்னவென்று குறிப்பாகத் தெரிவிக்கப்படாத நபரையும் பொதுவாகத் தெரிவிக்க பயன்படுத்தப்படுகிறது; தேசத்தின் சில பாகங்களில் **தாலுக்தாருக்கும்** **இஜாராதாருக்கும்** பதிலாகவும் **பட்டாதார்** உபயோகத்தில் இருக்கிறது. ஆனால் அது **இலாகா** என்ற வார்த்தையுடன் இணைந்து **பட்டாதார்-ஏ-இலாகா** என்று வழங்கப்படுகிறது' சாதாரனமா **தாலுக்தார்** என்ற பதமே, **இலாகாவுடன்** சம்பந்தப்படுகையில், கையாளப்பட வேண்டும் எனினும், அவ்வாறு செய்யப்படாததற்குக் காரணம் எனக்குத் தெரியாது.

நடுவர்களின் பட்டியலை நாம் இன்னும் முடிக்கவில்லை. இதில் **தேஷ்முக்குகள், தேஷ்பாண்டேக்கள், தேசாய்கள்** ஆகியோர்களும் அடக்கம். செயல் பூர்வமாக தேசம் முழுவதுமே வெவ்வேறு வகையைச் சேர்ந்த நடுத்தர ஜமீன்தார்களின் ஆணைக்குட்பட்டிருந்தது. **அயின்-ஏ-அக்பாயில்** கூட்டத் தலைவர்களின் கீழல்லாத **பர்கானுக்களின்** ஜமீன் தார்களுடைய ஜாதியைப் பற்றிய கூற்று இவ்வகுப்பினரையே குறிப்பிடுகிறது என்று தோன்றுகிறது. **பர்கானுக்களில்** பெரும்பான்மையானவைகளில் ஜமீன்தார்கள் ஒரு தனி ஜாதியைச் சார்ந்திருந்தமையை பற்றிய செய்தி, சில குலங்களும். குடும்பங்களும் மிகப் பெரிய பிரதேசங்கள் மீது **மீது ஜமீன்தாரி** அதிகாரம் பெற்றிருந்ததையே குறிப்பிடுகிறது.

முகலாய சாம்ராஜ்யத்தில் நடுவர்கள், மிகவும் முக்கியமான அரசியல், நிர்வாக, பொருளாதாரப் பொறுப்பேற்றிருந்தனர். அவர்களுடைய முக்கியமான பணி, வரி வசூல் பற்றிய முழு தகவல் கொடுப்பது, சட்டத்தையும் ஒழுங்கையும் தங்கள் துருப்புகள் உதவியுடன் நிலைநாட்டுவது, தோணித் துறைகளையும், நீர்ப்பாசனத் திட்டங்களையும் நல்ல நிலைமையில் வைத்திருப்பது மற்றும் தீர்வைகள் நியாயமான முறையில் செய்யப்படுகின்றனவா என்றும் குற்றம் குறைகள் கவனிக்கப்படுகின்றனவா என்றும் பார்த்துக்கொள்வது ஆகியவைகள்.

தங்கள் சேவைகளுக்குப் பதிலாக நடுவர்கள் பெற்றது என்ன? பல்வேறு சலுகைகள், தள்ளுபடிகள், வரி இல்லாத நிலங்கள், தனிப்பட்ட வரிகள் முதலியவைகளை அவர்கள் அனுபவித்தனர். **முஹாஸில்லானு** அல்லது **ஜரீபானு** என்னும் அளவை வரி அல்லது வருமான வசூல் செய்வதற்கான வரிகளும் நடுவர்கள் பெற்றுக் கொள்ள உரிமை பெற்றிருந்த தனிப்பட்ட வரிகளே. ஆனால் இந்த ஆதாயங்களுக்குப் பதி

லாக முகலாய சாம்ராஜ்யத்திற்கு ஆதார வருமானம் அளிப்ப வரான ஆதார ஜமீன்தார்களைத் திருப்தி செய்யவேண்டியது அவர்களுடைய கடமை. சாதாரனமாக முஹா"ஸில்லாறு நடு வர்களின் பிரதிநிதிகளிடம் கொடுக்கப்படவேண்டும்; ஆதார ஜமீன்தார்களிடம் அதிருப்தி அதிகமாக ஏற்பட்ட சமயங்க ளில் அமீனுக்கு விண்ணப்பம் செய்யப்படும்

நடுவர்களின் சார்பில் செய்யப்பட்ட தள்ளுபடிப் பற் றிய முழு விவரங்கள் தற்பொழுது கிடைக்கின்றன. இந்தத் தள்ளுபடிகள் மற்ற வரி இல்லாத மான்யங்களுடன் கலந்து விட்டதால், பிரிட்டிஷார் தீர்வை செய்யும் சமயம், இந்தத் தள்ளுபடிகள் விரிவாக விளக்கப்பட்டன. இன்னமும் பீஹா ரில் காணப்படும் விவரமான தள்ளுபடிப் பதிவு ஏடுகளைப் பற்றி டாக்டர் கயூமுத்தீன் அஹமத் குறிப்பிட்டிருக்கிறார். இது நிச்சயமாக ஒரு 'கித்மத்'தான் (சேவை). ஏனைய தள்ளு படிகளைத் தவிர, பதவிக்குப் பதவி, நிலைமைக்கு நிலைமை வித் தியாசப்படும் ஒரு விகிதமும் நடுவருக்கு இதற்காக அளிக்கப்பட்டது. சாதாரணமாக அரசாங்க வருமானத்தில் அவர்களுடைய பங்கு $2\frac{1}{2}$ யிலிருந்து 10 சதவீதம் வரை இருந் தது. அவருக்கு வரி இல்லாத நிலங்களோ (நன்கார் அல் லது பந்த்) அல்லது குறைவான நிலவரி விகிதங்களோ, சில சமயங்களில் எல்லாச் சலுகைகளும் சேர்ந்துமோ அளிக்கப் பட்டது. அவர்களுடைய நியமனம் எப்பொழுதும் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தாலும் பரம்பரைப் பதவியேற்பு முறை நிலவியது. சில சமயங்களில் சர்கரவர்த்தி யின் அரசாங்கம், இரு சகோதரர்கள் அல்லது இரு சிற்றப் பன், பெரியப்பன் மக்கள் அல்லது இரட்டையர்களிடையே சௌதரயீயை அல்லது முக்காதமியை பகிர்ந்தளிப்பது விரும்பத்தக்கது என்று கருதினாலும் மூத்த மகன் பதவிக்கு வருவதே சகஜம். சில நேரங்களில் கிராமப் பெரியார்கள்

மூத்தவனைத் தகுதியில்லை என்று கூறினால், வேறு எவராவது வாரிசாயினர்.

பீஹாரிலிருந்து கிடைத்திருக்கும் மிக சுவையான தொரு உதாரணம், நடுவர்களிடையிலும் ஆதார ஜமீன்தார் களிடையிலும் நிலவிய உறவைக் காட்டுகிறது. ஷாஹாபாத் மாவட்டத்திலும் பலமௌ மாவட்டத்தின் சில பாகங்களி லுல் ஆதார ஜமீன்தாரி அதிகாரங்களையும் தவிர, ஒரு முற்றி லும் பெரிய பிரதேசத்திற்குரிய நடுவர்களின் ஆதாரங்களை யும் உஜ்ஜயினர்கள் பெற்று, கூட்டத் தலைவர்களாகவும் முன் னேற்றம் பெற்றனர். இந்தக் கட்டத்தில் பேரரசுடன் அவர்களுக்கு மோதல் ஏற்பட்டது, அதன் காரண மாக அவர்கள் மீண்டும் நடுவராக பதவி குன்றச் செய்யப்பட்டனராயினும் அதில் ஒரு வித்தியாசம் இருந்தது: அவர்கள் வசூலித்த அசல் வருமானம் (தஹ்சீல்) அதிகரித் துக்கொண்டே போகையில் பேரரசின் கஜானாவிற்குச் செலுத் தப்பட வேண்டிய மொத்த வருமானம் (ஜமாதாமி) ஒரே சீராக இருந்தமையால், மிஞ்சியதை உஜ்ஜயினயர்கள் குடும்பம் வெகு காலமாகக் கைப்பற்றிக் கொண்டது என்னும் செய்தி யிலேயே அந்த வித்தியாசம் அடங்கி இருந்தது. இதற்குப் பிறகு அவர்கள் மீண்டும் கலகம் செய்து, கூட்டத்தலைவர்களின் உரிமையைப் பெற முயற்சித்தனர். இறுதியில் 18ம் நூற்றாண் டில் பாட்னாவின் ஆளுநர், இவர்கள் கடுமையாக நடத்தப்பட வேண்டியவர்கள் என்று தீர்மானித்தார். உஜ்ஜயினியர்கள் எவர்கள் மீது நடுத்தர உரிமை பெற்றிருந்தனரோ, அச்சிறிய முக்கியமற்ற ஜமீன்தார்களுடன் ஆளுனர் நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொண்டனர். இதனால் இவர்களுக்கு வரும்படி நஷ்டம் தவிர, இவர்களுடைய மதிப்புக்கும் பெருத்த அடியாக இருந்தது. இருப்பினும் பின்னர் இவர்கள் ஆளுநர் களின் ஆதரவைச் சம்பாதித்துக் கொண்டனர். முடிவில்

உஜ்ஜயினியர்கள் நடுவர்கள் என்ற முறையில் ஜமீன்தாரி உரிமைகளைப் பயன்படுத்திய பல பிரதேசங்கல் அசல் ஜமீன் தார்களை தங்களுடைய குத்தகை விவசாயிகளின் நிலைக்கு சரியச் செய்தனர். இவ்வாறு எங்கு அவர்கள் ஒரு காலத்தில் நடுதர ஜமீன்தார்களாகப் பணியாற்றினார்களோ, அப்பிர தேசங்களில் ஆதார ஜமீன்தார்களின் அதிகாரங்களைச் செலுத்தத் தலைப்பட்டனர். நடுத்தர ஜமீன்தார்கள் அடிக்கடி ஆதார ஜமீன்தார்களின் நிலையை வீழ்ச்சியடையச் செய்ய முயற்சித்தனர் என்பதை நாம் பார்க்கிறோம். எங்கே இந்த முயற்சி வெற்றி பெற்றதோ அங்கே ஒரு துணைச்சொத்துரிமை களின் வகை பிறந்தது. சில சமயங்களில், கிராம புறங்களில் தங்கள் நிலையைப் பலப்படுத்த நடுத்தர ஜமீன்தார்கள் **பிர்த்யா**க்கள் எனப்பட்ட துணை உரிமையாளர்களின் பிரிவைத் தோற்றுவித்தனர்.

இச்செயல்முறை எல்லாக் காலங்களிலும் நிகழ்ந்து கொண்டிருந்தது. நில உரிமை பெற்ற உழவர்கள் அல்லது ஆதார ஜமீன்தார்கள் உயர் அந்தஸ்துப் பெற்று நடுவர்க ளாக விரும்பினர். நேர்மாறாக, நடுவர்கள் ஆதார ஜமீன் தார்களை குத்தகை விவசாயிகளாக பதவி குன்றச் செய்ய முயற்சித்தனர்; அல்லது தாங்களே படிகளில் மேலே சென்று கூட்டத் தலைவர்களாக முயற்சித்தனர். இந்தப் போராட்டம் இடைவிடாமல் நடந்து கொண்டிருந்தது. இப்போராட்டத் தில் முகலாய பேரரசின் பங்கு என்ன?

இக்கேள்விக்கு நான் திருப்தி தரும் பதிலைக் கூற இய லாதென்றாலும் என் மனம் எந்த வழியில் இதைப் பற்றிச் சிந்திக்கிறது என்று தெரிவிக்க முடியும். அடிப்படையில் எனக் குத் தோன்றுவது இதுவே. முகலாய சாம்ராஜ்யம் இம்மூன்று வகை ஜமீன்தரர்களின் கூட்டுறவையும், ஆதரவையும் நம் பியே இருந்தாலும்—அதாவது கூட்டத் தலைவர், நடுத்தர,

ஆதார ஜமீன்தார் ஆகிய மூவகை ஜமீன்தார்கள்—அதே சமயம் ஒரு பக்கத்தில் முகலாயப் பேரரசின் நலன்களுக்கும் மறு பக்கத்தில் இம்மூவகை ஜமீன்தார்களுடைய நலன்களுக்கும் அடிப்படை முரண்பாடு இருந்தது. ஆட்சித் தலைவர்களை பேரரசின் பிரபு வர்க்கத்திலும் நிர்வாக அமைப்பின் மேற்படிகளிலும் இழுத்துக் கொள்வதன் மூலம் இம்முரண்பாட்டைத் தீர்க்க, முகலாயப் பேரரசு பிரயாசைப்பட்டது. பேரரசின் மேல் மட்டங்களிலும், நிர்வாக அமைப்பிலும் இவர்களை இழுத்துக் கொள்வதன் மூலம் சாம்ராஜ்யத்திற்கும் கூட்டத் தலைவர்களுக்குமிடையே உறுதியான பிணைப்புகள் ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்த முதல் சக்கரவர்த்தி, அக்பர் அவர்களே மிகவும் உயர்வான மன்ஸப்களும் முக்கியமான ஆளுனர் பதவிகளும் படைத் தலைமைகளும் கூட இவர்களுக்கு வழங்கப்பட்டன.

இக்கொள்கை அவரது வாரிசுகளாலும் தொடரப்பட்டது; அவுரங்கசீப்பின் ஆட்சியின் பிற்பாதியில் ஆட்சி புரிந்த கூட்டத் தலைவர்களின் வம்சத்தைச் சேர்ந்த எண்பது பேர்கள் 1000 அல்லது அதற்கு மேற்பட்ட மன்ஸப்களைப் பெற்றிருந்தனர். (1000 அல்லது அதற்கு மேற்பட்ட மன்ஸப்தார்களில் ஏறக்குறைய 15 சதவீதம்)5 கூட்டத் தலைவர்கள் உயர்ந்த மன்ஸப்களும் மதிப்பு மிக்க பதவிகளும் பெற்றபொழுது கணிசமான ஜாகீர்களும் பெற்றனர். இவை அவர்களுடைய பரம்பரை ஆட்சிப் பகுதிகளைக் காட்டிலும் அதிக வருமானம் உடையவை.

5. எம். அத்தர் அலி அவர்களின் 'தி மொகல் நொபிலிடி அண்டர் அவுரங்கசீப்' (The moghul nobility under Aurangazeb) ஆசியா, பம்பாய் 1966 பார்க்க.

பிற்காலத்தில் தலையாய உரிமை என்று வழங்கப்பட்ட கொள்கையை—''Paramountcy''—முகலாயர்கள் வற்புறுத்தினர். கூட்டத் தலைவர் தம்முடைய பதவிக்கு தன்னுடைய உரிமைகளைவிட சக்கரவர்த்தியின் நல்லெண்ணத்தையே நம்பியிருந்தார் என்பதே இதன் பொருள். கூட்டத் தலைவர்களில் ''ராஜா'' என்றழைக்கப்பட்டவர்கள், சக்கரவர்த்தியிடமிருந்து அப்பட்டத்தைப் பெற்றவர்கள் மட்டுமே. பொதுவாக மூத்த மகன் சொத்துரிமை பெறும் சட்டத்தையும், வம்ச பரம்பரை வாரிசுரிமைச் சட்டத்தையும் அனுசரித்தாலும் முகலாயர்கள் மறைந்த ராஜாக்களின் இளைய புத்திரர்களையோ அல்லது அவரது தூரத்து உறவினர்களையோ வாரிசாக அங்கீகரிக்கும் உரிமையை ஸ்தாபித்தனர். சக்கரவர்த்திக்குத் தேவைப்பட்டபோது ஸுல்தான்கள் தங்களுக்குக் கீழ்ப்படிந்த தலைவர்களின் படை உதவியைக் கோரும் உரிமை பெற்றிருந்தாலும், முகலாயர்கள் எப்பொழுதும் மன்ஸப்கள் கூட இல்லாத கூட்டத் தலைவர்களின் படை உதவியை நேரடியாக முறைமையாக உபயோகித்துக் கொண்டனர். தவிர, முகலாயப் பேரரசர்கள் பெரும் கூட்டத் தலைவர்கள் சிலரின் அடிமைகளுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் கொள்கையைப் பின்பற்றினர் என்றே தோன்றுகிறது. இவ்வாறு, முகலாயர்கள் இத்தலைவர்களின் செல்வாக்கைக் குன்றச் செய்து புதியதொரு நண்பர்கள் பிரிவைத் தோற்றுவித்தனர்.

சுயாட்சி பெற்றிருந்த தலைவர்களுடைய பரம்பரை ஆட்சிப் பகுதிகளை **வதன் ஜாகீர்**களாக நடத்த முயன்ற முகலாய முயற்சி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் பொருளாவது: அவர்கள் கொள்கை அளவில் **ஜாகீர்**தார்களின் அந்தஸ்தைப் பெற்றிருந்தனர் என்றும், பேரரசின் வருமான விதிகளுக்குக் கட்டுப்பட்டிருந்தனர் என்றும் கருதப்

பட்டனர்; ஆனால் நடைமுறையில் தங்கள் பிராந்தியங்களின் ஜாகீர்தாரி உரிமைகளை பரம்பரை வாரிசுரிமையாக அனுபவித்தனர். ஆகவே இவை மாற்றப்படாமல் காப்பாற்றப்பட்டன. இந்தக் கருத்து மன்ஸப்தார்களாக பதிவு செய்யப்பட்டவர்களையே குறிக்கக் கூடும் என்றாலும், சக்கரவர்த்தியின் அரசாங்கம், தலைவனால் கொடுக்கப்பட வேண்டிய காணிக்கையை (பேஷ்காஷ்) நிச்சயமான விளைச்சலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட நிலவரியாக மாற்ற முயற்சி செய்தது. முகலாயச் சக்கரவர்த்திகள் சுயேச்சையான தலைவர்களை பேரரசின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப் படியவும் கட்டாயப் படுத்தினர்-சிறப்பாக சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், தங்கு தடையில்லாத பிரயாண உரிமையை நிலைநாட்டுவதிலும். கூட்டத் தலைவர்கள் தங்கள் பிராந்தியங்கள் வழியாகச் செல்லும் வியாபாரிகளைத் தொந்தரவு செய்யாமல் இருக்கவும், அல்லது அவர்களிடமிருந்து வரிகள் வசூலிக்காமல் இருக்கவும் உத்தரவளிக்கும் பற்பல ஃபர்மன்கள் இருக்கின்றன.

இந்த ஏற்பாட்டுகளின் காரணமாக பேரரசில் உத்தியோகம் வகிப்பது பெரிய ஆட்சியாளராக தம் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளுவதை விட ஆதாயமுள்ளது என்று ஆட்சித் தலைவர்கள் உணர்ந்தனர். இச்செயல் முறை அநேக ஆட்சியாளர்களுக்கு பெரிய பிரதேசங்களின் நடுவர் அதிகாரங்களை வழங்கியது; இங்கு அவர்கள் வெவ்வேறு விதமான சேவைகள் புரிந்தனர். இந்த ஆட்சியாளர்களனைவருக்கும் ஒரு மொத்தத் தொகைக் கொடுப்பதைத் தவிர்த்த சக்கரவர்த்தி, இவர்களுக்கு பெரிய நிலப் பிரதேசங்களின் உரிமைகளை அளிப்பதன் மூலம் திருப்தி செய்ய முயன்றார். அதே சமயம் சுயேச்சை உழவர்களின் உரிமைகள் பாதுகாப்பாக உள்ளனவா என்பதையும் அவர் உறுதி செய்து கொள்ள

முயற்சித்தார்; எங்கு வரலாற்றுத் தொடர்பான காரணங்களினால் சுயேச்சை உழவர் குத்தகைதார விவசாயியின் நிலைக்குத் தாழ்ந்திருந்தாரோ, அங்கு குத்தகைதார் விவசாயியின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. உயர்வான வேளாண்மையின் தொடர்ச்சி, உண்மையாகப் பயிரிடுபவரின் ஸ்திரத் தன்மையையே நம்பியுள்ளது என்பதை உணரும் சாமர்த்தியம் முகலாயருக்கு இருந்தது. ஆகவே, வெவ்வேறு வகையான தண்டல்கள், நிச்சயித்த எல்லையை மீறிச் செல்லாமலிருக்கச் சூழ்நிலைகள் உண்டாக்கப்பட வேண்டும். இதனால், சக்கரவர்த்தியின் ஆணையாளர்களால் தேவையான தணிக்கை செய்யப்படும் என்பது நிச்சயம். ஆகவே, ஒரே சீரான வருமான சட்டத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. வேளாண்மையாளர்களுக்கு அதிக அளவில் பாதுகாப்புத் தர வேண்டியிருந்தது—சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவது, போக்குவரத்து வசதிகளைப் பராமரித்தல் போன்றவை. மையப்படுத்தப்பட்ட சாம்ராஜ்ய முறை இருந்ததினால் பொருளாட்சி பெற்ற ஊக்கம் சில முறைகளில் உழவர் குலத்துக்கும் வடிந்தது. நடுவர்களின் நலன்கள் காப்பாற்றப்பட்டாலும், நடுவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுத்திட்டங்களை மீறாமல் இருக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. முகலாய முயற்சியின் மொத்தக் குறிக்கோள் இதுவே.

முகலாய சாம்ராஜ்யம் நிலஉடைமைச் சமுதாயத்தின் வெவ்வேறு வர்க்கத்தினரின் அடிப்படை நலன்களை ''பாதுகாக்க'' தக்க சூழ்நிலைகளை ஏற்படுத்தியது என்றே கூறலாம். இந்த சாம்ராஜ்யம் நிறுவப்பட்டதன் விளைவாக நில உடைமைச் சமுதாயத்தின் பொருளாதார நிலை பல விதங்களில் மேன்மையடைந்தது. ஒப்பு நோக்காக, மிகுந்த அமைதியையும் பாதுகாப்

பையும் நிலைநாட்டியும், வியாபாரமும் வர்த்தகமும் பெருக வழி வகுத்தும், மக்களின் வாங்கு திறனைப் பல்வேறு விதமாகத் திருப்பியும், அதன் மூலமாக தொழில்களும் தயாரிப்புகளும் வளர்ச்சி பெற உதவியும் மையப் பேரரசு நாணயப் பொருளாட்சி முறை வளர்ச்சியுறத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தந்தது. நாணயப் பொருளாட்சியின் தோற்றம் விவசாய உற்பத்தியைப் பெரிதும் பாதித்தது; ஏனெனில் அரசாங்க வருமானம் மேலும் மேலும் ரொக்கமாகவே வசூலிக்கப்பட்டது. அதிகமான வருமானத் தேவையின் 6 விளைவாக, சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின் விஸ்தரிப்புக்கும் இது வழி வகுத்தது. அரசியல், நிர்வாக ரீதியாக தேசத்தை ஒருமைப் படுத்துவதில் கணிசமான அளவு ஜயமடைந்ததிலும், தன்னுடைய ஆணையை பற்பல கூட்டத் தலைவர்களின் மீது ஸ்தாபித்ததிலும் முக்லாயப் பேரரசு பெற்ற வெற்றியின்படி, இந்தியச் சமுதாய வளர்ச்சியில் அது முற்போக்கான பங்கையே ஏற்றிருந்தது.

6 விவசாய உற்பத்தியின் மீது பொருளாட்சியின் விளைவு குறித்தும், முகலாய சாம்ராஜ்யத்தில் இருந்த நில உடைமை உறவுகளின் தன்மை குறித்தும் சிறப்பான சர்ச்சைக்கு இர்ஃபன் ஹபீப் அவர்களின் "அக்ரேரியன் ஸிஸ்டம் ஆஃப் முகல் இந்தியா" (Agrarian system of Mughal India) பம்பாய் 1963 என்ற நூலைக் காணவும். 17-ம் நூற்றுண்டின் இறுதியாண்டுகளில் நில உடைமைச் சீர் குலைவின் இயல்பு பற்றிய விவாதத்திற்கு சதீஷ் சந்திராவின் நூலைக் காண்க: "பார்ட்டீஸ் அண் பாலிடிக்ஸ் அட் தி முகல் கோர்ட்" (Parties and Politix at the Mughal Court) அலிகர், 1959; இரண்டாவது பதிப்பு பி. பி. எச். டில்லி, 1972.

இருப்பினும், அதே சமயத்தில் இம்முறை முழுவதும் முரண்பாடுகளைக் கொண்டிருந்தமையால் போராட்டங்கள் தவிர்க்க முடியாதவையாக இருந்தன; இவைகளை முகலாயப் பேரரசு முறையின் நான்கு மூலைகளுக்குள் தீர்த்துக் கொள்ளு வதும் இயன்றிருக்காது. ஆகவே, இந்த முறை இரு நூற்றாண் டுகளாக மிகவும் உறுதியானதொரு சமநிலை அளித்தாலும் மேன்மேலும் சண்டைகளுக்கு அடி கோலியது. நிலம் படைத்த பல்வேறு வர்க்கத்தினரிடையே அவர்களுடைய நலன்களுக்காகப் பூசல்கள் ஏற்பட்டன. தவிர, அடிக்கடி- சிறப்பாக உறவுமுறை, கூட்டம், குடும்பம் அல்லது ஜாதியின் அடிப்படையில் உறவுகள் வலுவாக விருந்தால்—உள்ளூர் நடு வரோ அல்லது கூட்டத் தலைவரோ கலகம் செய்யத் துவங்கு கையில் தமக்குப் பின்னால் ஆதார ஜமீன்தார்கள் மற்றும் குத்தகைதார் விவசாயிகளின் மிகப்பெரியப் பிரிவைத் திரட்ட முடிந்தது. எல்லாத் தலைவர்கள் மற்றும் மன்னர்களுக்கும் ஜாகீர்கள் கொடுப்பது அசாத்தியமாதலால் கலகங்கள் தவிர்க்க முடியாதவை. ஜமீன்தார்கள் அல்லாத அநேக பிர புக்கள் பேரரசில் உத்தியோகம் வகித்த தலைவர்களின் பத்தி ரமான நிலையைக் கண்டுப் பொறாமையுற்றனர்: மன்ஸப் களையும் ஜாகீர்களையும் தங்களுக்கு மாத்திரம் வழங்கச் சக் கரவர்த்தியை நெருக்கினர். ஜாகீர்களுக்கு நெருக்கடி அதி கரிக்கவே, கூட்டத் தலைவர்களின் அவாக்களைப் பூர்த்தி செய் யும் நிலையில் பேரரசர்கள் இல்லை, தவிரவும் முகலாய ஆட்சி யின் இறுதியில் பல வகைப்பட்ட ஜமீன்தார்களின் பங்குச் சுமையும் பேரரசின் வருமானச் சுமையும் கடைசியில் பயிரிடு பவரின் மேல் விழுந்தது. இது நில உடைமைப் பொருளாட் சியின் மீது மிக்கப்பிரயாசையைச் சுமத்தியதனால் மேலும் முன் னேற்றமடைவது சாத்தியமின்றியிருந்தது. விளைச்சலில் 50 சதவீதத்துக்கு மேல், உழவரைக்கொடுக்க கட்டாயப்படுத்தப் படாமல் இருப்பதற்காக தன்னாலியன்ற வரை பேரரசு முயன்

றது. ஆனால் பேரரசின் ஆணை தளர்ந்ததும், ஜாகீர்களுக்கும் நெருக்கடி அதிகரித்ததும், விவசாயப் பொருளாட்சி சீர்குலைவை எதிர்கொள்ள நேரிட்டது-18ம் நூற்றாண்டில் இது இன்னும் மோசமாயிற்று.

இந்தக் காரணக் கூறுகள் அனைத்தும் சேர்ந்து இந்த முறை முழுவதும் வீழ்ச்சியடையச் செய்தது. நான் இந்த முறை முழுவதும் என்ற தொடரை உபயோகிக்கையில் கிராம மட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பற்றி, உண்மையில் குறிப்பிடவில்லை. இந்த வீழ்ச்சி சாம்ராஜ்யத்தின் அரசாங்க மட்டத்தில் நிகழ்ந்தது. ஆயினும் பேரரசுக்கு தொடர்ந்து விசுவாசக் கடன் பட்டிருந்த சிறிய மாகாணங்கள் மட்டத்திலும், மாகாணங்களின் பகுதிகளிலும் இம்முறை தொடர்ந்தது. இந்த ஏற்பாடு மாகாண மட்டத்திலோ அல்லது அதற்கும் கீழ் மட்டத்திலோ நீடித்திருந்தாலும் பேரரசு முறையின் பலவீனங்கள் பலவற்றை மட்டுமே பெற்றிருந்தது. மையப் பேரரசினால் ஏற்படும் அனுகூலங்கள் இதற்கில்லாமையால் இக்கீழ் மட்டத்திலும் சிறிது காலம் கழித்துச் சிதைவு தொடங்கியது. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் கிராமத் தொழில்களின் சரிவே. கிராமக் கைத்தொழில்கள் சரிவடைய ஆரம்பித்ததும் கிராமத்தில் இருந்த கொஞ்ச நஞ்ச "செழுமை நிலை"யும் மேன்மேலும் மறையத் துவங்கியது-செழுமை நிலை என்பதை நான் ஒப்பு மதிப்பிறகாகவே மேற்கோள் குறிகளுக்கிடையே பயன்படுத்துகிறேன்.

முக்கியமான கேள்விக்கு நான் பதில் கூறவில்லை என்றே நினைக்கிறேன். இந்த ஏற்பாட்டு முறை அதனுடைய மறுமலர்ச்சிக்கு ஏற்றச் சூழ்நிலைகளை உருவாக்கியிருக்க முடிந்திருக்குமா? என்னுடைய விடை வலுவான தர்க்க வியலையோ அல்லது அதிக மெய்ச் செய்திகளையோ அடிப்

படையாகக் கொண்டிருக்காது என்றே கருதுகிறேன். ஆனால் மேல்வாரியான குறிப்பைப் போன்றக்—Obiter dictum—கருத்து தெரிவிக்க அனுமதிக்கப்பட்டால் இதைத்தான் நான் கூறுவேன்; "ஆம் அது ஆற்றல் உடைத்ததே" ஆனால் அந்த ஆற்றல் நடைமுறையிலிருந்த வரம்பிற்குட்பட்டதாக இல்லை. இம்முறையின் அழிவு ஏற்கெனவே ஆரம்பித்து விட்டது என்று எனக்குப்படுகிறது; இந்த நலிவின் செயல் முறை இந்த ஏற்பாட்டின் வீழ்ச்சிக்கும் மற்றும் வேறு ஏதாவது முறை பிறப்பதற்கும் நிச்சயமாக அடிகோலியிருக்கும். இது தோல்வியடைய வெளிச் சக்திதான் காரணம் என்று கூறுவதற்கில்லை.

நூலாசிரியர்

புரொபஸர் ஸய்யத் நூருல் ஹஸன 1921-ம் ஆண்டு பிறந்தார். அலஹாபாத்திலும், ஆக்ஸ் போர்டிலும் கல்வி பயின்றவர். 1954-ம் ஆண்டிலிருந்து அலிகர் முஸ்லீம் சர்வகலாசாலையில் பேராசியராக பணியாற்றினர். 1957 லிருந்து வரலாற்றுத் துறையின் தலைமை ஆசிரியராக இருந்தார். அதே சர்வகலாசாலையில் 1968 லிருந்து வரலாற்றுத் துறையின் உயர்நிலையத் தலைவராக பணிபுரிந்தார். ஸ்கூல் ஆப் ஓரியண்டல் ஸ்டடீஸ், லண்டனிலும் ஆசிரியராக பணியாற்றினர். இன்டியன் ஹிஸ்டரி ஆல் ஸோல்ஸ் காலேஜ், ஆக்ஸ்போர்டிலும் காங்கிரசின் காரியதரிசியாக பணியாற்றிய இவர், 1973ம் வருட கூட்டத்திற்கு பொது அக்கிராசனராக இருந்தார். இன்று இவர் மந்தியச் சர்க்காரில் கல்வி மந்திரி.